விலை சதம் 5

இரண்டாம் பதிப்பு

பக்கங்கள் 4

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்

சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. நட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194A, நட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஆண்டு புரட்டாசி மீ 31உ வெள்ளிக்கிழமை — Colombo, October, 17, 1947 | ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 2 | இதழ் 36

நிரந்தரக் கமிட்டிக்கு இந்தியா ஆதரவு

தென்மேற்கு ஆப்பிரிக்கா பற்றி இந்தியா தீர்மானம் வெற்றி

பாரசீகத்தில் ராணுவ முஸ்தீபுகள்

நியூயார்க், அக். 16

நிரந்தரக் கமிட்டி அமைப்பதுபற்றி ஐக்கிய தேச அசெம்பிளியில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க நிச்சயித்து விட்டது. அத்தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதுபற்றி ஆஸ்திரேலியாவும் சில சிறிய ஐரோப்பிய நாடுகளுமாக 5 நாடுகள் தயங்கிக் கொண்டிருக்கின்றன. ரஷியா பலமாக எதிர்க்கிறது. யூகோவும் செக்கோவும் எதிர்க்கின்றன.

தர்மகர்த்தா கமிட்டி

தென் மேற்கு ஆப்பிரிக்காவை தர்மகர்த்தா நிர்வாகத்திற்குக் கொண்டுவர தென்னாப்பிரிக்கா ஒப்பந்தத்தை சமர்ப்பிக்க வேண்டுமென தர்மகர்த்தா கமிட்டியில் இந்தியா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது. ஆதரவாக 20 நாடுகளும் பாதகமாக 7 நாடுகளும் வோட்டளித்தன. நான்கு நாடுகள் நடுநிலைமை வகித்தன.

சட்டக் கமிட்டி

சட்டக் கமிட்டியில் ரஷியப் பிரதிநிதி பேசியபோது யுத்தக் குற்றவாளிகள் சம்பந்தமாக சென்ற வருடம் அசெம்பிளி நிறைவேற்றிய தீர்மானத்தை சம்பந்தப்பட்ட நாடுகள் சரியாக அனுஷ்டிக்கவில்லையென்றும் 17 யுத்தக் குற்றவாளிகள் பிரிட்டனிலும் சுவிட்ஜர்லாந்திலும் அடைக்கலம் புகுந்து நேசதேசங்களுக்கு விரோதமாக வேலை செய்து வருகிறார்களென்றும் தெரிவித்தார்.

இத்தாலிய குடியேற்ற நாடுகள்

லண்டன், அக். 15

இத்தாலிய குடியேற்ற நாடுகள் சம்பந்தமாக தங்கள் உரிமைகளையும் நோக்கங்களையும் இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி இத்தாலி, எகிப்து உட்பட 23 நாடுகளுக்கு நான்கு வல்லரசுகளின் உதவி அந்நிய நாட்டு மந்திரிகளின் மகாநாட்டார் அறிவித்திருக்கிறார்கள்.

பாரசீக ராணுவ முஸ்தீபு

டெஹ்ரான், அக். 15

இன்று பாரசீக சலாசார சங்கத்தில் பாரசீக ராணுவத் தளபதி ரஸமாரா பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- ராணுவ முஸ்தீபுக்கு அதிகப் பணம் தேவை. அந்நியர் பாரசீகத்தைத் தாக்கினால் நாட்டின் ஒன்றரைக்கோடி மக்களும் எதிர்ப்பர்.

பாரசீகத்தில் ராணுவ ஒத்திகைகளும் மகாநாடுகளும் மும்முரமாக நடைபெறுகின்றன. பாரசீக விமானப்படை ஒத்திகையை மன்னர் பார்வையிட்டார். பிரிட்டிஷ் ராணுவ விமானங்களை பாரசீக விமான வீரர்கள் செலுத்தினார்கள்.

எகிப்தில் காலரா கொடுமை

கெய்ரோ, அக். 15

எகிப்தில் காலரா கொடுமை அதிகரித்துள்ளது. வடகிழக்கு மாகாணமான டகலியாவில் காலரா கோரமாக இருப்பதால் அது தண்டிக்கப்பட்டிருக்கிறது. எகிப்தில் தினமும் காலராவால் மக்கள் மடிகிறார்கள். செப்டம்பர் 23-ம் தேதி ஆரம்பமானதிலிருந்து இதுவரை 2172 பேர்கள் மாண்டனர்.

சைனாவும் அமெரிக்காவும் எகிப்துக்கும் மற்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கும் காலராமருந்து அனுப்புகின்றன.

பாலஸ்தீனத்தில் காலரா நோய் எகிப்திலிருந்து பரவாது தடுக்க 15 லட்சம் ஜனங்களுக்கும் ஊசிபோட்டு வருகிறார்கள். ஈராக் மேற்கிலிருந்து பிரயாணிகள் வருவதைத் தடை செய்திருக்கிறது.

ரஷியா ருமேனியா உறவு

புக்காரெஸ்ட், அக். 15

இன்று பார்லிமெண்ட் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து மன்னர் மைக்கேல் பேசியபோது, விமான தளங்கள் சம்பந்தமான ருமேனிய சர்க்கார், சோவியத சர்க்காருடன் ஒத்துழைக்குமென்றும் பரஸபர உதவிக்கு நேசமாகவுள்ள நாடுகளுடன் ருமேனியா உடன்படிக்கை செய்து கொள்ளுமென்றும் தெரிவித்தார்.

ஹங்கேரி சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக மூன்று ஹங்கேரிய கிராமங்கள் செக்கோ நாட்டுடன் சேர்க்கப்பட்டன.

பல்கேரியாவில் கிரேக்க பிரஜைகள் துன்புறுத்தப்படுவது சம்பந்தமாக கிரேக்க சர்க்கார் பல்கேரிய சர்க்காருக்குக் கண்டனக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். கிரேக்க – பல்கேரிய சமாதான உடன்படிக்கை மிக்க ஆலோசனையின் மீது ஊர்ஜிதம் செய்யப்படுமென்று சொல்லப்படுகிறது.

கிரீஸின் தென் மேற்குப் பகுதியில் வலது சாரியான பார்லிமெண்ட் அங்கத்தினர் பபடோபுலோஸ தலைமையில் கிரேக்க சர்க்கார் துருப்புகள் கிரேக்க கொரில்லாக்களுடன் மும்முரமான யுத்தம் செய்கிறார்கள்.

10,000 டன் அரிசி இலங்கை வந்துள்ளது

பிரிட்டனில் இருந்து 42 கார்கள் வந்துள்ளன

கொழும்பு, அக். 17

கொழும்புக்கு நேற்று காலை சுமார் 10,000 டன்களுக்கதிகமான அரிசியும் பெருந்தொகையான மாவும் வந்துள்ளது. கேப்செற் டேவிட் என்னும் கப்பலில் 8500 டன் அரிசியும் ரங்கூனிலிருந்து வந்த "பண்டிட்" என்னும் கப்பலில் 1775 டன் அரிசியும் இலங்கை வந்துள்ளது. "டெரிகனிலே" என்னும் கப்பலில் 9000 டன்களுக்கதிகமான மாவு வந்துள்ளது.

நேற்று காலை வந்து சேர்ந்த "மகாநாதா" என்னும் கப்பலில் பெருந்தொகையான சிமிந்தியும் 42 கார்களும் கொழும்புக்கு பிரிட்டனில் இருந்து வந்துள்ளது.

15 சென்ட்டர்கள் தெரிவு

பிரதிநிதிகள்சபை தேர்தல் முடிவு

பொதுத்தேர்தலில் கட்டுப்பணமிழந்த யூ. என். பி. அபேட்சகருக்கு முதல்வெற்றி

தோல்வியுற்றபோது வகுப்புத் துவேஷத்தைக் கக்கியவருக்கு யூ. என். பியின் பரிசு

கொழும்பு, அக். 17

நேற்று குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணிநேரம் தாமதித்து பிரதிநிதிகள் சபை கூடியது. நேற்றைக்கு முன்தினம் 30 அபேட்சகர்களின் நியமனச் சீட்டு தாக்கல் செய்யப்பட்டிருந்தபடியால் அவர்களில் 15 பேர்களை சென்ட் சபைக்கு அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்க நேற்று பிரதிநிதிகள் சபையின் அங்கத்தினர்கள் ரகசிய வோட்டளித்தபின் சபை நாலரை மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது. வோட்டுகள் எண்ணப்பட்டு முடிந்ததும் சபை மீண்டும் கூடியபோது 'ஸ்பீக்கர்' துரு ஏ எப் மொலமுரே பகல் 2-30 மணிக்கு தெரிந்தெடுக்கப்பட்ட 15 சென்ட்டர்கள் பெயர்களையும் சபையில் வாசித்தார்.

தெரிந்தெடுக்கப்பட்ட 15 சென்ட்டர்கள் பின்வருமாறு:-

யூ. என். பி.

திரு. டபிள்யூ. ஏ. பி. சொய்சா
ஸ்ரீமதி. ஏ. எப் மொலமுரே
திரு. சிரில் டி சொய்சா
,, ஜஸ்டின் கொத்தலாவல
,, பாரன்ஸ ரத்வத்த
,, சி. சாரத் ரத்வத்த
,, ஆர். எப். எஸ். டி மெல்
,, ஏ. ஆர். ஏ. ராஸிக்
டாக்டர். எம். ஜி. பெரைரா

சமசமாஜக்கட்சி

திரு. டபிள்யூ. கே. ஜினதாச

தமிழ்காங்கிரஸ

டாக்டர், இ. எம். வி. நாகநாதன்

இந்தியன் காங்கிரஸ

திரு. பெரி சுந்தரம்

போலஷவிக் லெனினிஸ்ட்கட்சி

திரு. டி. டபிள்யூ. கே. பெரைரா

சுயேச்சை

திரு. எஸ். நடேசன்

கமியூனிஸ்ட்

திரு. எல். பி. ஜயசேனா

யூ என். பி விசித்தரப் போக்கு

பிரதிநிதிகள் சபைக்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோல்வியுற்றவர்கள் பொதுஜன அபிமானத்தை இழந்தவர்களாதலால் அவர்களை சென்ட் சபைக்குத் தெரிந்தெடுப்பதோ நியமனம் செய்வதோ முறையற்ற செயலாகும் என்பது பொதுஜன வாக்காக இருந்து வருகிறது. அப்படியிருந்தும் நேற்று நடைபெற்ற சென்ட் சபையில் யூ. என். பி. கட்சியார் நடத்துகொண்ட மாதிரி விசித்திரமாகவும் விபரீதமாகவுமிருக்கிறது. தெரிந்தெடுக்கப்பட்ட சென்ட்டர்களில் ஒருவரான திரு. டபிள்யூ. ஏ. பி. சொய்சா பொதுத்தேர்தலில் கட்டுப்பணத்தை இழந்தவர், தோல்வியுற்றபோது வகுப்புத்துவேஷப் பேச்சு பேசியவர். ஆனால் சென்ட் சபைத தேர்தலிலோ முதலாவது வோட்டுக்கள் எண்ணப்பட்டபோதே முதன்மையாகத தெரிந்தெடுக்கபபட்டிருப்பதாகத் தெரியவருகிறது பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற மற்றொருவரான திரு. ஏ. ஆர். ஏ. ராஸிகும் சென்ட்டராகத தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். திரு எம். ஏ எல். காரியப்பருக்கும், டாக்டர். எம் ஜி பெரைராவுக்கும் ஒரேவிதமான எண்ணிக்கையுள்ள வோட்டுகள் கிடைததததால் அதிர்ஷடச் சீட்டுப் போடடுப்பார்க்க அவர்கள் சம்மதித்தார்கள். அதிர்ஷடச் சீடடுப் போட்டதில் டாக்டர். எம். ஜி பெரைரா தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஒரு பார்லிமெண்டரி காரியதரிசி அளிததவோட்டு செல்லாது போய்விட்டது என்று தெரிய வருகிறது. ஏனெனில் அவர் தவறுதலாக தேர்தல் அதிகாரியின் கையெழுத்துக்குக் கீழே தனது கையெழுத்தைப் போட்டுவிட்டார் ஆகவே அந்த பார்லிமெண்டரி காரியதரிசியின் வோட்டுச் சீட்டை தேர்தல் அதிகாரி தள்ளிவிட்டார்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குப் புறம்பான பூரண சுதந்திரம்

பர்மாவில் சோஷியலிஸ்ட் குடியரசு ஸ்தாபிக்கப்படும்

பிரதம மந்திரி தக்கின் நு பிரசங்கம்

லண்டன், அக். 16

பர்மா ஜனுவரி மாதம் பரிபூரண சுதந்திரமடைவதால் அதை யொட்டி செய்யப்பட்ட ஆங்கிலோ—பர்மா உடன்படிக்கையில் நாளை பிரிட்டிஷ் பிரதமர் அட்லியும் பர்மா பிரதமர் தக்கின் நு வும் கைச்சாத்திடுவார்கள். இன்று தக்கின் நு பிரிட்டிஷ் சர்க்காரின் பர்மா மந்திரியான லார்டு லிஸ்டோவலைச் சந்தித்துப் பேசினார். பர்மா நிதி மந்திரி, தலைமையில் இங்கு முன்னமே வந்துள்ள தூதுக் கோஷ்டியையும் சந்தித்துப் பேசினார். சமீபத்தில் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தப்படி பிரிட்டன் சுதந்திர பர்மாவின் பாதுகாப்புப்படைகளுக்கு ராணுவப் பயிற்சி அளிக்க உதவபுரியும். நாளை செய்யும் உடன்படிக்கையில் பாதுகாப்புநி , பிரஜா உரிமை, வர்த்தக சம்பந்தம், ஒப்பந்த விஷயமான கடமைகள் இவைகள் பற்றிய விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சம்பந்தமில்லாத பரிபூரண சுதந்திரத்தை ஜனுவரியில் பர்மா அடையும்.

சோஷியலிஸ்ட் குடியரசு

ரங்கூன், அக். 16

சில தினங்களுக்கு முன் பிரதம மந்திரி தக்கின் நு இங்கு பேசியபோது சுதந்திர பர்மாவில் எவ்வித அரசாங்கம் நிறுவப்படும் என்பதைக் குறித்து பின்வருமாறு தெரிவித்தார்:- பர்மாவில் முதலாளித்துவம் ஒழித்துக் கட்டப்படும். இடதுசாரிகளின் ஆட்சி நிறுவப்படும். இடதுசாரியென்றால் கமியூனிஸ்ட் ஆட்சியலல சோஷியலிஸ்ட் குடியரசு நிறுவப்படும்.

70 வருட பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின் வரும் ஜனுவரியில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குப் புறம்பான சோஷியலிஸட் குடியரசை பர்மா நிறுவும். பர்மாவின் பொருளாதாரச் சீர்கேடான நிலைமையைப் போக்க கைத்தொழில்கள் தேசிய மயமாக்கப்படும். பர்மா செழிப்பான தேசம். ஆனால் பர்மிய மக்களோ பரமதரித்திரர்களாக இருக்கிறார்கள், நாட்டின் செல்வம் முதலாவது பிரிட்டிஷ் முதலாளிகளாலும் பின்னர் இந்திய முதலாளிகளாலும் சீன முதலாளிகளாலும் அனுபவிக்கப்பட்டது. ஆகவே சோஷியலிஸட் பர்மா இந்த முதலாளிகளுக்குப் பதிலாக பர்மிய முதலாளிகளை சிருஷடிக்க விரும்பவில்லை.

பிரஞ்சு கப்பல்கள் வேலை நிறுத்தம்

பிரான்ஸில் நெருக்கடி

பாரிஸ, அக். 15

பிரான்ஸமுழுவதிலும்இன்று கப்பல்கள் இநந்த இடத்தை விட்டு அசையவிலலை. மாலுமிகளும் மற்றும் கப்பல் அதிகாரிகளும் சிப்பந்திகளுமாக 31,000 பேர்கள் பிரான்ஸிலும் வட ஆப்பிரிக்காவிலும் வேலைநிறுத்தம் ஆரம்பித்துவிட்டார்கள் வெளிநாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் வழிகாட்டிகளின்றி துறைமுகங்களுக்குள் பிரவேசிக்கமுடியவில்லை. பாரிஸ்போக்கு வரத்து தொழிலாளர்கள் 30,000 பேர்கள் மூன்று தினங்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள் இன்று டாக்ஸி டிரைவர்களின் வேலை நிறுத்தமும் ஆரம்பமாய் விட்டது. 11 சத விகித சம்பள உயர்வு கோரி பிரான்ஸ முழுவதிலுமுள்ள தேசிய மயமான காஸ, மின்சாரக் கைத்தொழில்களைச் சேர்ந்த ஒரு லட்சம் தொழிலாளர்கள் திங்கட்கிழமைவேலைநிறுத்தம்ஆரம்பிக்கத தீர்மானித்திருக்கிறார்கள். மந்திரிசபை இன்றுகூடி இதைப்பற்றி ஆலோசனை செய்கிறார்கள். மாலுமிகள் சங்கத்துடனும் சமரசபபேச்சு நடத்தி வருகிறார்கள். (ராய்ட்டர்)

லண்டன் இந்தியா லீக்கின் எதிர்கால வேலை

இந்திய யூனியனில் சமஸ்தானங்கள் தொல்லை

வெள்ளக் கஷ்ட நிவாரணத்திற்கு வியட்நாமின் 10 லக்ஷ பிராங்க் நன்கொடை

லண்டன், அக் 15

20 வருட காலமாக இந்தியாவின் சுதந்திரத்திற்காக பிரிடனில் கிளர்ச்சி செய்து வந்த இந்தியா லீக் இனி இந்திய டொமினியனை ஆதரித்து வேலை செய்யும. பாக்கிஸ்தான் டொமினியனுடன் நேசபான்மை காட்டும். இந்த லீக்கிற்கு பர்மிங்ஹாம், மான்செஸ்டர், லிவர்ப்பூல், கிளாஸ்கோ முதலிய இடங்களிலும் இன்னும் பல ஊர்களிலும் கிளைகளிருக்கின்றன. இந்த லீக்கின் காரியதரிசி பாரிஸ்டர் ஜுலியர்ஸ் ஸில்வர்மன் என்னும் பிரிட்டிஷார், இந்தியா பிரிவினையைக் குறித்து அவர் வருத்தம் தெரிவித்து இரு டொமினியன்களும் மீண்டும் ஐக்கியமாகுமென்று நம்புவதாகவும் கூறினார்.

பாக்கிஸ்தானில் சிக்கி அவதியுறும் ஹிந்து, சீக்கிய அகதிகளை இந்தியாவுக்குக் கொண்டு வரும் பொருட்டு இந்திய சர்க்கார் வாடகைக்கு அமர்த்திய பி. ஓ ஏ. ஸி. டக்கோட்டா விமானங்கள் 12 புதுடில்லிக்குப் பறந்து செல்லுகின்றன

பாக்கிஸ்தான் எஞ்சினீயரிங், பிராட்காஸ்டிங் சேர்வீஸ டைரக்டரான ரியாஸ அகமது நாளை இங்கிருந்து அமெரிக்காவுக்குப் பறக்கிறார். பாக்கிஸதானில் சக்தி வாய்ந்த 2 லட்சம் பவுண் விலை மதிப்புள்ள குற்றலை ஒலிபரப்பு இணைப்பு ரேடியோவை ஸதாபிகக அமெரிக்கா ரேடியோ உற்பத்தியாளர்களைக் கலந்து பேசுவார்.

இந்தியாவுக்கு வியட்நாம் உதவி

புதுடில்லி, அக். 15

இந்திய ஸதானிகர் மூலம் வியட்நாம் குடியரசு இந்தியாவுக்கு வெள்ளக் கஷ்ட நிவாரணத்திற்காக 10 லட்சம் பிராங்குகள் அனுப்புகிறது குடியரசுத் தலைவர் ஹோ சி மின் பண்டித நேருவுக்குக் கீழ்க் கண்ட செய்தி அனுப்பியிருக்கிறார்.-

கங்கா நதி தீரத்தில் எனது இந்திய சகோதரர்கள் பலர் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் கஷ்டப்படுவதை அறிந்து வருந்துகிறேன். ஆதலால் வியட்நாம் அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இந்திய ஸதானிகர் மூலம் 10 லட்சம் பிராங்க் கஷ்ட நிவாரணத்திற்காக அனுப்பி வைக்கிறது.

நிஜாமின் தொல்லை

புதுடில்லி, அக். 15

ஹைதராபாத் சமஸதானத்தைச் சுற்றியுள்ள மாகாணங்களும் சமஸதானங்களும் தத்தம் பிரதேசங்களிலிருந்து முஸலிம்கள் ஹைதராபாதில் போய் குடியேற கூட்டங் கூட்டமாக வெளியேறுவதைத் தடுக்கும்படி இந்திய சர்க்கார் உதவி விட்டிருக்கிறார்கள். இப் பிரதேசங்களில் அமைதி நிலவுகின்றபோதிலும் அங்குள்ள முஸலிம்கள் பஞ்சாப் கலகத்திற்குபபின் ஹைதராபாத்துக்குக் குடியேறச் செல்கிறார்கள்.

சென்னை, பம்பாய் மாகாணங்களிலிருந்தும் மத்திய மாகாணத்திலிருந்தும ஐக்கிய மாகாணத்திலிருந்தும் கூட ஏராளமான முஸலிம்கள் ஹைதராபாத் சமஸதானத்திற்குச் செல்கின்றனர் இந்த இயக்கம் விரும்பத்தக்கதல்ல ஹைதராபாத் சமஸதானத்திலுள்ள ஒரு அரசியல் கட்சியின் நடவடிக்கைகளால் இவ்வித இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஹைதராபாத்தில் முஸலிம் ஜனத தொகையைப் பெருக்கி பிறகு இந்திய யூனியனை எதிர்க்க ஆயத்தமாவதே இக்கட்சியின் நோக்கம். இந்த இயக்கத்தைத் தடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எல்லை மூடப்பட்டது

நாகபுரி, அக். 15

மத்திய மாகாண சர்க்கார் ஹைதராபாத்--பீரார் எல்லையை 16 மைல் நீளத்திற்கு மூடிவிட்டனர்.

தூதுக் கோஷ்டி திரும்பியது

ஹைதராபாத், அக். 15

பிரதம மந்திரி சத்தாரி நவாப் தலைமையில் சமரஸப் பேச்சு நடத்த டில்லி சென்ற தூதுக் கோஷ்டி இங்கு திரும்பி வந்தது.

டில்லி சம்பாஷணைபற்றி சத்தாரி நவாப், சுல்தான் அகமது, வால்டர் மாங்கடன் ஆகியோர் நிஜாமைச் சந்தித்துப் பேசினார்கள்.

அடுத்த 10 தினங்களில் இந்திய யூனியனுக்கும் ஹைதராபாத் நிஜ முக்குமிடையே ஒரு முடிவு ஏற்படுமென்று தெரிகிறது.

ஜுனாகத் பிரச்னை

புதுடில்லி, அக். 14

இந்திய அரசியலில ஜுனாகத் சமஸதானப் பிரச்னை ஒரு பெருந் தொல்லையாக இருக்கிறது. அது பாக்கிஸதானில் சேர்ந்தால் குறிப்பாக கத்தியவாரிலும் பொதுவாக இந்திய யூனியனுக்கும் சங்கடமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைச் சமாளிப்பதுபற்றி இந்திய சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறார்கள்.

காஷ்மீர் மகாராஜா

காஷ்மீர் மகாராஜா புதுடில்லியில் இந்தியா கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டனையும், பிரதம மந்திரி நேரு, உள்நாட்டு மந்திரி படேல் ஆகியோரை சந்தித்துப் பேசினார். காஷ்மீர் எல்லையில் மலை ஜாதியார் வந்து குவிவதையும், தேசிய மகாநாட்டார் கிளர்ச்சியையும் பாக்கிஸதான் எச்சரிக்கையையும்பற்றி அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்தார்.

புதுக்கோட்டையில் கிளர்ச்சி

புதுக்கோட்டை, அக். 15

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ஐயர் தலைமையில் புதுக்கோட்டை சமஸதான காங்கிரஸ் கமிட்டி கூடியது புதுக்கோட்டையில் பொறுப்பாட்சியை நிறுவ நவம்பர் 15-ம் தேதி காங்கிரஸ சத்தியாக்கிரகப் போர் ஆரம்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, நட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஹூ புரட்டாசி மீ 31உ
வெள்ளிக்கிழமை

சமூகப் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்பிற்காக, இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷியா முதலிய ஐரோப்பிய நாடுகளில் எத்தனையோ திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையிலும் சமீபத்தில் தொழிலாளர் கஷ்ட நஷ்டங்களை ஆராய்ந்து, அவைகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்துவதற்காக ஒரு விசாரணைச் சபையினர் நியமிக்கப்பட்டனர். இச் சமூகப் பாதுகாப்புச் சபையினர் அரசாங்கத்தால் தொழிலாளருக்கென ஒரு தேசிய சகாய நிதி உருவாக்கப்படல் வேண்டுமெனச் சிபாரிசு செய்தனர். தொழிலாளர் நலடலன்களை உத்தேசித்து அரசாங்கம் இத்தகைய நிதியை உண்டாக்காது இன்னும் காலந் தாழ்த்தி வருவது உகந்ததல்ல.

இச் சபையினரின் திட்டப்படி தொழிலாளர்கள் தங்கள் மாச உழைப்பில் ஒரு பகுதியையும், முதலாளிகள ஒரு பகுதியையும் அதற்கெனக் கொடுக்க வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கிறது. மேலும் ஒவ்வொரு தொழிலாளியும் தனது உழைப்பில் நூற்றுக்கு ஐந்து வீதமும், அதே தொகையை முதலாளியும் இந் நிதிக்குக் கொடுக்கலாம் என்றும் சபையார் புத்தி கூறியுள்ளார்கள். இது வேநியாயமான முறையாகச் சபையாருக்குப் புலப்பட்டிருக்கிறதென எண்ண இடமுண்டு. வேலையிலிருந்து இளைப்பாறும் காலத்தில், ஒரு தொழிலாளிக்கு மாசம்தோறும் ஏதாவது பென்ஷன் கொடுப்பதாயிருந்தால் முதலாளியும் தொழிலாளியுமாகச் சேர்ந்து நூற்றுக்கு பதினைந்து வீதமான தொகையைத் தேசிய சகாய நிதிக்குக் கொடுக்கலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இக்கடைசி நியதியைவிட்டு, மீதமான ஐந்து வீதப்பணத்தையும் யார் கொடுப்பது என்ற கேள்வி எழுந்துள்ளது அரசாங்கம் கொடுப்பதா? முதலாளிகொடுப்பதா? தொழிலாளி கொடுப்பதா? இம் முக்கிய கேள்விக்கு சபையினர் தக்க பதில் கொடுக்காது விட்டார்கள். "அனுபவத்தில் இப்பிரச்னையை ஆராய்வதே முறை" என்று சபையினர் கூறுவது பொருத்தமற்றதாகும்.

ஒரு கேள்வியை எழுப்பி அதை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்பதைக் கூறாமல் விடுவது ஒருவருக்கும் நன்மை பயக்கமாட்டாது என்பது சொல்லத் தேவையில்லை. மனிதன் பிழைகள் செய்வது வழக்கம். அதேபோன்று விசாரணைச் சபையினரும் எல்லாமறிந்தவர்களாய் இருக்க முடியாது.

விசாரணைச் சபையினரின் அறிக்கையிலிருந்து நாம் அறிந்து கொள்ளக்கூடியது ஒன்று. அது இலங்கையில் தொழிலாளர்களுக்குத் தக்க பாதுகாப்புகள் இல்லை என்பதே.

இச்சந்தர்ப்பத்தில் சபையினர் ஒரு அடிப்படையான கொள்கையை வெளிப்படுத்தியுள்ளனர். "பொருள் உற்பத்தியைப் பெருக்கி இலங்கையின் தேசிய வருமானத்தைப் பெருக்க வேண்டும். தேசிய வருமானம் பெருகினால்தான் சமூகப் பாதுகாப்புக்கான பல திட்டங்களில் பணத்தைச் செலவு செய்ய முடியும்" என்பதே சபையார் கண்ட முடிவாகும்.

தமக்குத்தாமே உதவி செய்வதாகிய தேசிய சகாய நிதி ஏற்படுத்துவதில் அரசாங்கத்திற்கு அதிக பணச் செலவு ஏற்படாது. இக்காரணங்கொண்டு அரசாங்கம் இவ்விஷயத்தில் கூடிய சீக்கிரம் கவனஞ் செலுத்த வேண்டும் என்பதே எமது அவா.

சொத்து முழுவதையும் ஸ்ரீதனமாக கொடுத்தாராம்

மாமகனின் நடத்தையால் தற்கொலை செய்துகொண்டார்

மாத்தறை, அக் 16

தம்மிடமிருந்த சொத்துக்களெல்லாவற்றையும் தமது மகளுக்கு ஸ்ரீதனமாகக் சொடுத்தும் தம்மை வீட்டைவிட்டு வெளியேற்றிய மருமகனின் செயலால் மனமிடிந்துபோன பி எல். பி கீரிஸ அப்பு என்னும் வெஹெலகொடையைச் சேர்ந்த வயோதிகர் நில்வல கங்கையில் வீழ்ந்து தற்கொலை புரிந்துகொண்டார். விசாரணை நடத்திய அதிகாரி நபர் தற்கொலை செய்து மாண்டதாகக் கூறினர்.

ஐக்கிய கேரள நாடு உதயம்

திருவாங்கூர் தமிழர், தமிழ் நாட்டுடன் சேர்வர்

செங்கோட்டை, அக். 14

ஐக்கிய கேரளம் அமைக்கும் யோசனை உருவானால் திருவாங்கூரிலுள்ள தமிழர்கள் தங்கள் வருங்காலத்தைப்பற்றி தாங்களே தீர்மானித்து தமிழ் நாட்டுடன் சேர வேண்டுமானால் சேர்ந்து கொள்ளலாம். தமிழ் நாட்டிலுள்ள மலையாளிகளும் கொச்சியுடனும், மலபாருடனும் சேர்ந்து கொள்ளலாம். திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸின் நிலை இதுதான் என்று திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளை கூறினார். இன்று பத்திரிகை நிருபருக்களித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்

தேச சேவக சைன்யம்

ஆசியத் தொழிலாளிகளுக்கு இலவச வைத்தியம்

சர்வதேச தொழில் காரியாலய சிபார்சு

லண்டன், அக். 15

ஆசியாவில் விவசாயத் தொழில்களிலும், நகரத் தொழில்களிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கு இலவச வைத்திய உதவியளிக்கும் திட்டம் ஒன்றை சர்வதேச தொழில் காரியாலயம் இந்தியாவில்நடக்கும் ஆசியத் தொழில் காரியாலய மகா நாட்டுக்குச் சிபாரசுசெய்யும் எனத் தெரிகிறது.

மேற்படி ஆசியத் தொழில் காரியாலய மகாநாடு புதுடில்லியில் அக்டோபர் 27 தொடக்கம் நவம்பர் 7-ம் தேதி வரை நடைபெறும். (ராய்ட்டர்)

துப்பாக்கி காயத்தால் ஒருவர் மரணம்

ரத்னபுரி, அக் 16

ரத்னபுரி கிலீமலே என்னுமிடத்திலுள்ள ஈ ஏ. அலிஸ சிங்கோ என்பவரை ஆரிய தாஸா என்பவர் ஒரு ரப்பர் ஸடோரில் வைத்து துப்பாக்கியால் சுட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. ரத்னபுரி மாஜிஸ்டிரேட் ஸதலத்துக்குச் சென்று விசாரணை செய்தார். காயமடைந்தவர் ஜெனரல் ஆஸபத்திரிக்கு திங்கட்கிழமை அட்புறப்படுத்தப்பட்டு அங்கேயே மரணமானார்.

திரட்ட நேதாஜி இந்திய தேசிய ராணுவ அதிகாரிகள் முயற்சி

அக்டோபர் 21ல் அமிர்தசரஸில் மகாநாடு

நாட்டில்அமைதியையும்பாதுகாப்பையும் நிலைநாட்டும் நோக்கம்

புதுடில்லி, அக். 13

தன்னலமற்ற தியாகங்களின் மூலம் தேசத்துக்குத் தொண்டு செய்வதையே லட்சியமாகக் கொண்ட ஊழியர்கள் ஸ்தாபனம் ஒன்று அமைக்க வேண்டுமென்று தாங்கள் தீர்மானித்திருப்பதாக, நேதாஜிப்படை மாஜி ஆபீஸர்களாகிய ஜெனரல் மோஹன் சிங், கர்னல் நிரஞ்சன் சிங் கில், கர்னல் ஜி எஸ். தில்லான் ஆகிய மூவரும் இன்று பிரஸதாபித்தனர். இந்த ஊழியர் ஸ்தாபனம் தேச சேவக சேனை என்று அழைக்கப்படும். நேதாஜி படைக்கும் இந்ததேச சேவக சேனைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று அறிவிக்கப்படுகின்றது. இந்த ஸ்தாபனம் எந்த அரசியல கட்சியையும் வகுப்பையும் சார்ந்ததல்லவென்றும், அதன் லட்சியத்தில் நம்பிக்கையுடையவர்கள் யார் வேண்டுமானாலும் அந்த ஸ்தாபனத்தில் சேரலாம் என்றும் ஜெனரல் மோஹன் சிங் முதலியோர் கூறுகின்றனர். இந்த ஸ்தாபனத்தின் ஆரம்பக் கூட்டம் அக்டோபர் 21-ம் தேதி அமிர்தசரசில் நடத்தப்படும். அபபோது ஸதாபனத்தின் செயல்முறைத் திட்டம் என்ன என்பது வெளியிடப்படும்.

வகுப்புக் கலவரங்களால் ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கும், எதிர்காலத்தில் ஆபத்து ஏற்படாதபடி தடுப்பதற்கும் இந்த ஸ்தாபனம் உதவி செய்யும் என்று நேதாஜி படை அதிகாரிகள் கூறுகின்றனர். அவர்கள் மேலும் கூறுவதாவது:-

"பாகிஸ்தானுக்கும்இந்தியாவுக்கும் இடையே மிகவும் நெருங்கிய நட்புறவு ஏற்படவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அதற்காக பிரார்த்திக்கிறோம். ஆனால் மதவெறி, பலாத்காரம், பிடித்தடக்கும் ஆசை, குறையாடுதல், பெண்களைக் கடத்திச் செல்லுதல் முதலியவற்றின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட தேசத்தவர் ஒரே நாள் இரவில் நல்லவர்களாகி விடுவார்கள் என்று எங்களால் நம்ப முடியவில்லை முஸ்லிம் லீகர்கள் மேற்கொண்டு ஏதாவது தகாத செயல்களில் இறங்கக் கூடுமென்று நாங்கள் சந்தேகப்படுகிறோம். ஆபத்து வருவதற்கு முன் எச்சரிக்கையுடன் இருந்து கொள்வது நல்லது எனவே அந்த ஆபத்தை சமாளிப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டியது அவசியமாகின்றது."

தேச சேவக சேனை நாட்டின் நன்மைக்காக தீவிரமாகஉழைக்கும் என்றும், அதற்காக அரும்பாடுபட தேச சேவக சேனை தயாராக இருக்கின்றது என்றும், சர்க்காரும், மக்களும் பத்திரிகைக்காரர்களும் தங்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்றும் நேதாஜிப்படை ஆபீஸர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

தமிழ் நாட்டு சினிமா பட முதலாளி

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் சென்று திரும்பினர்

சென்னை, அக். 15

சினிமாத் தொழிலையே நமது நாட்டிற்கு அறிமுகம் செய்து வைத்த காலஞ்சென்ற ஸ்ரீ சாமு வேல் வின்ஸென்டின் குமாரர், வெளிநாட்டு சினிமாத் தொழில் நிலைமையை நேரில் கண்டறிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு திரும்பியிருக்கிறார்.

நேற்று மாலை உட்லண்ஸில் அவருக்கு ஒரு தேனீர் விருந்து அளிக்கப்பட்டது அவர் மேனாடுகளுக்கு சென்ற விவரம்பற்றியும் ஆங்குள்ள சினிமாத் தொழில் தியேட்டர்கள் முதலியவை பற்றியும் அழகாக எடுத்துச் சொன்னார்.

தமிழ்கலை களஞ்சிய நிதி வசூல்

சென்னை, அக். 13

தமிழ்க் கலை களஞ்சியம் ஏற்படுத்துவது சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதிக்கு மேற்கொண்டு வசூல் விவரம்:

ஏற்கெனவே வசூலானது	ரூ. 1,06,051
திருவாடுதுரை அம்பலவாண பண்டார சந்நிதிகள்	5000
சென்னை பளையகாட் கம்பெனி	1001
ஸ்ரீ ஏ. எல். பி வி. வி. ஆர். வீரப்பச் செட்டியார்	1001
ஸ்ரீ வி. நாடிமுத்துபிள்ளை	1001
மொத்தம்	ரூ. 1,14,054

மேற்கொண்டு நன்கொடைகளை பின்கண்ட விலாசத்துக்கு அனுப்பலாம்:-ஸ்ரீ எஸ் ஆர். எம். சி. டி. ஏ. அண்ணாமலை செட்டியார் பொக்கிஷதார், தமிழ் அகாடமி 'எவர்கிரீன்,' தியாகராயநகர்.

'அரசியல் ஏணியில் ஏறும் இலங்கை'

புதிய அரசியலை ஆகரித்த திரு. சேனநாயகாவுக்கு பாராட்டு

லண்டன், அக் 15.

'அரசியற் சீர்திருத்த உச்சாணிப்படி' யில் ஏறியிருக்கும் இலங்கை சாம்ராஜ்யப் பிரவேசம் செய்திருக்கிறது. அதற்கேற்றபடியாக அது சிறப்பாகவே நடந்துகொள்ளும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. லண்டன் ராயல் எம்பயர் சபையில் பேசிய சோல்பரி பிரபு இன்று மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் திரு. டி. எஸ். சேனநாயகா தமது உத்தியோக காலம் பூராவும் பொறுமை, நடுநிலைமை முதலிய சிறந்த அரசியல் தலைவர்களின் குணத்துடன் விளங்கியதாகக்கூறினர். நான் சேனநாயகாவுக்கு இப்புகழ் மாலை சூட்டுவதன் காரணம் எனது கமிஷனின் முடிவான ஆலோசனைகளுக்கு அவர் ஓர் முக்கிய காரணமாக விளங்கினர் என்றும் குறிப்பிட்டார்.

'இலங்கையில் ஒரே வகைச் சமூகத்தினரை நாம் காணாத போதும் இரு சமூகத்தினர் தம்மிடையே யுத்தமிடும் காட்சியை நாம் காணவில்லை இலங்கையில் உள்ள மேல் வகுப்பு மக்கள் மிகப் புத்திக்கூர்மையுள்ளவர்களாகவும் காணப்பட்டனர். மக்களோ அனுபவநிறைந்த 'சமாதானம் விரும்பும் நன்மக்கள்' என்றும் அவர் தமது பேச்சிலே தெரிவித்தார். (ராய்ட்டர்)

வியாபாரிகள் பொருட்களைப் பதுக்குகிறார்கள்

பத்திரிகைச் செய்தியால் கிலி

கொழும்பு, அக். 15

சமீபத்தில் நிதி மந்திரி "சொகுசுப்" பொருட்கள் மீது வரி விதிக்கக்கூடும் என்று ஓர் செய்தி பத்திரிகைகளில் வெளியானதல்லவா? அதனைத் தொடர்ந்து சில வியாபாரிகள் பொருட்களைப் பதுக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஒரு சில "டிரேட் மார்க்" குகளைக் கொண்ட சிகரெட்டுகள் கடைத் தெருவிலே அடியோடு காணப்படவில்லை. சிகரெட் கம்பெனிகளோ இதனைக் கண்டு ஆச்சரியப்படுகின்றன. ஏனெனில வழக்கம் போலவே அவை தமது வாடிக்கைகாரர்களுக்குரிய கோட்டாவை எவ்வித குறைவுமின்றிப் பூர்த்தி செய்து வருகின்றன.

சம்பளத் திட்டத்துக்கு பலத்த கண்டனம்

கிராமக் கமிட்டிகள் சிப்பந்திகள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

குருநாகலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற அகில இலங்கை கிராமக் கமிட்டிகள் சிப்பந்திகள், உத்தியோகஸ்தர் சங்கக் கூட்டத்தில் ஸதல ஸ்தாபன சர்க்காரின் புதிய சம்பளத் திட்டத்தை பலமாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய சம்பளத் திட்டத்தை திருத்தும்படி கமிஷனை கேட்டுக் கொள்வதாகவும் பொதுக் கூட்டமொன்றை விரைவில் கூட்டி ஆலோசிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்ஷி புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓர் புதிய கமிட்டியும் அமைக்கப்பட்டது.

நேற்றிரவு விடுத்த ஓர் அறிக்கையில், இக் கூட்டமும் தேர்தல்களும் சட்ட விரோதமானதாகும் என்றும் இவைகள் செல்லுபடியாகாமலிருக்க சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் டாக்டர் தினுத் கூறினர். முஸ்லிம் லீக்கின் உத்தியோகபூர்வமான கூட்டம் ஒன்று நவம்பர் 16-ம் தேதி கூடவிருக்கிறது என்று இவர் கூறினர்.

பாரிஸ் வேலை நிறுத்தம் தொடர்கிறது

பிரிட்டிஷ் இரும்புத் தொழில் தேசிய மயமாகும்

ஆஸ்திரேலிய வங்கிகளும் தேசச் சொத்தாகலாம்

பாரிஸ், அக். 15

பாரிஸ் நகரிலே வேலை நிறுத்தம் செய்திருக்கும் 30,000 பஸ் குழாய் ரயில தொழிலாளர்களுக்கு தனது பூரண ஆதரவையும் தருவதாக உறுதி கூறி கம்யூனிஸ்ட் தலைமையில் உள்ள ப்ரெஞ்சுத் தொழிற்சங்க சம்மேளனம் இன்றோர்பிரகடனம் வெளியிட்டது. பிரஸதாப பிரகடனத்தில் அரசாங்கம் "தொண்டர்"களை மேற்படி வேலைகளைச் செய்ய முன் வரும்படி அழைத்திருப்பது பலமாகக் கண்டிக்கப்பட்டது.

ஆனால் அரசாங்கம் அசைந்து கொடுப்பதில்லை என்று தீர்மானித்துள்ளது. பிரதமர் ராமடீர் மந்திரி சபைக்கு வேலை நிறுத்த நிலைமைபற்றி தமது அபிப்பிராயங்களைச் சமர்ப்பித்தார். அதன் பின்பு தகவல் இலாகா மந்திரி அரசாங்கத் தீர்மானத்தில் மாறுதல் இல்லை என அறிவித்தார்.

தொழிற் சங்க சம்மேளன அறிக்கை மாலுமிகளின் சம்பள கோரிக்கைபற்றிக் குறிப்பிட்டு அவை "மிக நியாயமானவை" என்று தெரிவித்துள்ளது. மாலுமிகள் சங்கத்தைச் சேர்ந்த 31,000 பேர் நாளை பிரெஞ்சு அஞ்சலாயத் துறை முகங்களிலே தமது வேலைநிறுத்தத்தை ஆரம்பிப்பார்கள். அவர்களது கோரிக்கைகள் அதற்கு முன் அளிக்கப்பட்டால் அவர்கள் வேலைநிறுத்தம் செய்யமாட்டார்கள்.

ரயில்வேத் தொழிலாளர் சம்மேளனம் போக்குவரவு இலாகா உத்தியோகஸ்தர்களைப் பேட்டிகாண்பதற்கு ஓர்தூதுக் கோஷ்டியை அனுப்பியது இத்தூதுக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை சம்பந்தமாக சமரச முடிவு ஏற்படலாம் எனத் தெரிவித்தனர்.

ரொனுல்ட் கார் தொழிற்சாலையில வேலைசெய்யும் 1800 தொழிலாளர் ஒரு நாள் அனுஷ்டிததனர்.

இரும்புத் தொழில் தேசிய மயம்

லண்டன், அக். 15

பிரிட்டிஷ் பிரதமர் அட்லி பார்லிமெண்டின் புதிய நிகழ்ச்சி அட்டவணையை மன்னர் பிரானுடைய அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

மன்னரின் பிரசங்கத்தில் அரசாங்கத்தின் முக்கிய திட்டங்கள் வெளியாக்கப்படும் என்று நம்பப்படுகிறது. அவற்றில் இரும்பு, காஸ தொழில்களை தேசியச் சொத்தாக்கும் திட்டம் அதிக முக்கியமானதாகும் என்று கருதப்படுகிறது.

பர்மாவின் சுதந்திரம்

பர்மா அடுத்த ஜனுவரியிலிருந்து சாம்ராஜ்யத்துக்கு வெளியே பரிபூரண சுதந்திரம் பெறும். இது பற்றிய பார்லிமெண்ட் மசோதா சம்பந்த மாசவும் மன்னர் பிரான் பிரஸதாபிப்பார்.

மந்திரி சபையின் இன்றைய முக்கிய பிரச்னையாய் உள்ள பொருளாதார நெருக்கடி சம்பந்தமாக சில திட்டவட்டமான விஷயங்கள் மன்னர் பிரானால் சுட்டிக் காட்டப்படலாம் என்றும் இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

வங்கிகளும் தேசச் சொத்து!

கான்பெரா, அக். 15

ஆஸதிரேலியப் பிரதமர் ஜோசப் சிட்லீ பிரதிநிதிகள் சபையின் நாட்டில் உளள எல்லா வங்கிகளையும் தேசிய உடமையாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை இன்று பிரேரித்தார். இம்மசோதாவால் அரசாங்க வங்கிகளோ சேம வங்கியோ பாதிக்கப்பட மாட்டாது. தனிப்பட்ட நபர்கள் அல்லது கம்பெனிகளின் வங்கிகளே இதனால் பாதிக்கப்படும். (ரா)

யூதர்களைப் பகிஷ்கரிக்க அராபிய நாடுகளின் முடிவு

லிபியாவுக்கு சுதந்திரம் வேண்டும்

பெய்ரூத், அக் 15

இன்று அராபிய லீக் கவுன்ஸிலின் ரகசியக் கூட்டம் மூன்றரை மணிநேரம் நடைபெற்றது. பாலஸ்தீன யூதர்களைப் பகிஷ்கரிக்க மேலும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் எல்லா அராபிய நாடுகளும் யூதர் பிரவேசத்தைத் தடுத்து எல்லைகளை மூடிவிட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. முன்னர் இத்தாலியின் குடியேற்ற நாடாகஇருந்த லிபியாவுக்கு அராபிய தாமகர்த்தா நிர்வாகத்தின் கீழ் சுதந்திரம் அளிக்கும்படி பிரிட்டன், ரஷியா, அமெரிக்கா, பிரான்ஸ ஆகியநான்குநாடுகளுக்கும் ஒரு மசஜர் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நியூயார்க்கில் ஐக்கிய தேச பாலஸ்தீன கமிட்டியில் இன்று பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி கிரீச்ஜோன்ஸ பேசுவார். பாலஸ்தீன பிரிவினை பற்றி அமெரிக்காவும் ரஷியாவும் தெரிவித்துள்ள அபிப்பிராயத்திற்குப் பதிலளிப்பார். (ராய்ட்டர்)

மடகாஸ்கர் புரட்சித் தலைவர்கள்

விசாரணை நடைபெறும்

பாரிஸ், அக். 15

மார்ச்சு மாதம் ஆரம்பமான மடகாஸ்கர் புரட்சியை அடக்க எடுததுக்கொண்ட நடவடிக்கை பற்றி பிரஞ்சு குடியேற்ற நாட்டு மந்திரி பிரஞ்சு மந்திரி சபையில் அறிக்கையை சமர்ப்பித்தார். சமீபத்தில் நடைபெற்ற புரட்சியில் கைதியான தலைவர்களின் வழக்கு விசாரணை கூடிய சீக்கிரம் நடைபெறும் என்று தெரிவித்தார். (ராய்ட்டர்)

தென்னாப்பிரிக்க இந்தியர் சத்தியாக்கிரஹப் போர்

வெள்ளையர் நிறத் துவேஷ அட்டூழியம்

இந்தியரை ஆங்கிலேயன் தாக்கினான்

டர்பன், அக். 13

மூன்று வாரங்களுக்குள் முதல் முறையாக 40 சதத்தியாக்ரகிகள் ஓர் முக்கிய தெருவில் டர்பன் முனிசிபல் நிலத்தில் குடியேறினர். இங்கிருந்து போக மறுத்ததன் பேரில் போலிஸார் இவர்கள் பெயர்களை எழுதிக்கொண்டு நாளையதினம் மாஜிஸ்டிரேட் முன்பு ஆஜராகுமாறு எச்சரித்தனர்.

டிரான்ஸ்வாலிலிருந்து வந்த பல இந்தியர்களையும் ஆறு ஸ்திரீகளையும் கொண்ட இந்த சத்யாக்ரகிகளுக்கு டிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ. ஓம். ஏ. காசாலி தலைமை வகித்தார்.

இந்தியர்களுக்கு தண்டனை

டர்பன், அக். 13

நிலத்தில் சட்டத்தை மீறி குடியேறியதற்காக 5 ஸ்திரீகள் உட்பட 39 இந்தியர்களுக்கு தலா 3 பவுண் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறினால் 30 தினங்கள் சிறைவாசம் அளிக்கப்படும் என்று கூறப்பட்டது. எல்லோரும் சிறைக்குச் செல்ல சம்மதித்தனர்.

இந்திய அனுதாபி தாக்கப்பட்டார்

டர்பன், அக். 13

யூனியன் சென்ட்டின் தேசியபிரதிநிதியான சென்ட்டார் எச். எம். பாஸனரை ஓர் ஆங்கிலேயர் அடித்துக் காயப்படுத்தினர். நேற்று ஓர் இந்தியர்கள் கூட்டத்தில் பேசிவிட்டு டர்பனிலிருக்கும் தனது ஹோட்டலுக்கு திரும்பியபோது இவர் தாக்கப்பட்டார். இந்த ஆங்கிலேயர் ஸ்ரீ பாஸ்னரை முதலில் படிக்கட்டில் அடித்த பிறகு பின்னால் சென்று ஹோட்டல் தாழ்வாரத்தில் மறுபடி தாக்கினர்.

இரு இந்தியர் அடிக்கப்பட்டனர்

டர்பன், அக். 13

நேற்றிரவு கேலி கெருவும், உம்பிமோ ரஸ்தாவும் கூடும் இடத்தில் தங்களை ஆங்கிலேயர்கள் அடித்ததாக கூறியுள்ள இரு இந்தியர்களின் குற்றச்சாட்டை டர்பன் போலிஸார் விசாரித்து வருகின்றனர்.

சத்தியாக்ரகத்திற்கு ஆதரவளிக்க வாக்குறுதி

டர்பன், அக் 12

டர்பனில் சத்தியாக்ரக இயக்கத்திற்கு முழு விதத ஆதரவு அளிக்க ஆயிரக்கணக்கான இந்தியர்கள் ஓர் கூட்டத்தில் வாக்குறுதியளித்தனர்.

ஐ. நா. தீர்மானங்கள்படி நடக்க யூனியன் சர்க்காரை எதிர்த்து தேவையான நடவடிக்கைகளை ஐ நா. எடுத்துக் கொள்ளும் என்று பரிபூரண நம்பிக்கையும் தெரிவிக்கபபட்டது.

இந்திய முஸ்லிம்களிடையே பிளவு

ஜோன்ஸ்பர்க், அக் 13

டிரான்ஸவால் முஸலிம் லீகிடையே இன்று ஓர் பிளவு ஏற்பட்டது. டிரான்ஸவால்முஸலிம் லீக்கைச் சேர்ந்த சுமார் 4000 அங்கத்தினர்கள் லீக் தலைவர் ஸ்ரீ எம். ஏ. தினுத் மீது, ஓர் நம்பிக்கையில்லாத தீர்மானத்திற்கு வோட் அளித்து புதிய தேர்தல்களை நடத்தினர். டாக்டர் எம். ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புச் செய்திகள்:

ஸ்தல ஸ்தாபன கமிஷன

முனிஸிப்பல்-அர்பன் சபைகளுக்கும் பிரதிநிதித்துவம்

கொழும்பு, அக் 17

இப்பொழுது ஸ்தல ஸ்தாபன சர்க்கார் கமிஷனுக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்குமிடையில் நிலவும் பலவித அபிப்பிராய பேதங்களுக்கும் கஷ்டங்களுக்கும் முற்றுக்காண ஒரு புதிய முறையை ஸ்தல ஸ்தாபன சுகாதார மந்திரிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஸ்தல ஸ்தாபன சர்க்கார் கமிஷனில் இப்பொழுதுள்ள ஐந்து அங்கத்தவர்களுடன் முனிஸிப்பல் சபைகள் சங்கத் தலைவர், அர்பன் சபைகள் சங்கத் தலைவர் ஆகிய இருவரையும் சேர்த்து 7 பேர்கள் கொண்ட கமிஷனை நி. மிக்க வேண்டுமென்றும் இக்கமிஷனுக்கு நியமிக்கப்படும் தலைவர் அதிகாரபூர்வ மற்றவராகவும் நிரந்தரமானவராகவும் இருக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு முனிஸிப்பல் சபை சமீபத்தில் ஸ்தல ஸ்தாபனசர்க்கார் கமிஷனை இலாமல செய்யும்படி அல்லது முனிஸிப்பல் சபைகளை ஸ்தல ஸ்தாபன சர்க்கார் கமிஷனிலிருந்து கலைத்து விடும்படி தெரிவித்திருந்தது. மேற்கூறிய தீர்மானங்கள் இந்த விண்ணப்பத்தக்கு எதிராக மாற்றுக தெரிவிக்கப்பட்டுள்ளன.

* * *

முனிஸிப்பல் கோர்ட்டில் போலிஸாரின் வழக்குகள்

கொழும்பில் வீடுகளின் வராந்தைகளிலும் கடைகளின் வராந்தைகளிலும் நித்திரை கொள்ளும் சுமார் 400 பேர்கள் மீது போலிஸார் குற்றம் சாட்டி முனிஸிப்பல் கோர்ட்டில் வழக்குதாக்கல் செய்துள்ளனர். இவர்கள் சொந்தக்காரர்களின் உத்தரவுகளைப் பெறாது அங்கங்கே அகப்பட்ட இடங்களில் நித்திரை போவதாகக் கூறப்பட்டது. பலரும் தாங்கள் குற்றவாளிகளென ஒப்புக்கொண்டனர். முனிஸிபல் கோர்ட் மாஜிஸ்டிரேட் எதிரிகளுக்கு ரூ 5 முதல் ரூ. 10 வரை அபராதங்கள் விதித்தார். பலரை போலிஸார் பழைய குற்றவாளிகளென்று தெரிவித்ததன் மேல் அவர்களில் பலருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

* * *

போலிஸ் படையில் சீர்திருத்தம்

உள்நாட்டு மந்திரியின் முதல் வேலை

கடந்த பெப்ரவரி மாதத்தில் போலிஸ் விசாரணைக் கமிஷன் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ள சிபார்சுகளில் அத்தியாவசியமானவற்றை அமுலுக்குக் கொண்டுவருவதே உள்நாட்டு மந்திரியின் முதல் வேலையாக இருக்குமென்று கூறப்படுகிறது.

போலிஸ படையின் எண்ணிக்கையைக் கமிஷனின் சிபார்சுப்படி அதிகரிப்பதை அமுலுக்குக் கொண்டுவரவாமென்று பழைய உள்நாட்டு விவகார இலாகா நிர்வாகக் கமிட்டி அங்கீகரித்திருந்தது. அதன்படி ஒரு போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், 3 டிபுடி இன்ஸபெக்டர் ஜெனரல்களும், 82 சூப்பிரன்டெண்ட், உதவி சூப்பிரன்டெண்டுகளும், 500 இன்ஸபெக்டர்களும, 752 சார்ஜண்டுகளும், 4662 கான்ஸ்டபிள்களும் போலிஸ படையில் இருக்கவேண்டும். எடுத்தவுடன் இத்தொகையை நிறைசெய்ய முடியாதென்றாலும் ஒழுங்காக நடவடிக்கையை எடுத்து எண்ணிக்கையை விரைவில் கூட்டலாமென்றும் கூறப்படுகிறது.

* * *

ஜப்பான் சமாதான மகாநாட்டில் இலங்கை

கான்பெராவில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் மகாநாட்டுக்குச் சென்று திரும்பியுள்ள அடிஸன் பிரபு, ஜப்பானின் சமாதான மகாநாட்டில் இலங்கையின் பிரதிநிதித்துவம் பற்றி ஆலோசிக்கப்படலாமென்று கூறியுள்ளார். காமன்வெல்த் நாடுகளின் மகாநாட்டில் ஜப்பான் சமாதான உடன்படிக்கைக்கு வேண்டிய விஷயங்கள் பற்றி காமன் வெல்த் நாடுகள் தம்முள் விவாதித்துக் கொண்டனவென்றும் தூரகிழக்கு கமிஷனில் பிரதிநிதித்துவம் வகித்த நாடுகள் சமாதான மகாநாட்டிலும் பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டுமென்று தாங்கள் அங்கீகரித்திருப்பதாகவும் இலங்கையின் நலத்தைத் தாங்கள் கவனித்தே வருவதாகவும் அவர் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

* * *

அடிஸன் பிரபுவின் பாராட்டு

இலங்கை பிரதிநிதிகள் சபையின் அமைப்பை அடிஸன் பிரபு வெகுவாகப் பாராட்டியதுடன் இலங்கையின் அரசியல் மாற்றம் பற்றியும் குறிப்பிட்டார். விரைவில் இலங்கையின் புதிய அரசியல் மாற்றம் பற்றி பாராளுமன்ற சட்டமொன்று நிறைவேற்றப்படுமென்றும் அதன் பின் இலங்கை-பிரிட்டன் தொடர்புகள் காமன்வெல்த் தொடர்பு இலாகா பகுதியால் நடத்தப்படுமென்றும் கூறினார்.

* * *

லைசென்ஸ் இன்றி துப்பாக்கி வைத்திருந்தார் எதிரிக்கு ரூ. 300 அபராதம்

கொழும்பு தெற்கு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில மகராவைச் சேர்ந்த ஒரு வர்த்தகர் சந்திரிஸ் சில்வா என்பவர் லைசென்ஸ் இல்லாது துப்பாக்கி வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் நீதிபதி எதிரிக்கு ரூபாய் 300 அபராதம் விதித்தார்.

* * *

மின்சாரம் தாக்கி சமையற்காரர் மரணம்

கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த குயினஸ் வீதியில் உள்ள ஒரு வீட்டில் வேலை செய்த சமையற்காரராகிய கே. ஞானமுத்து என்பவர் மின்சார பெயின்களை இணைக்கும் பகுதியில் தற்செயலாக தொட்டது காரணமாக மரணமடைந்தாரென்று கூறப்படுகிறது. திரு ஜே. என். ஸி. திருச்செல்வம் நேற்று முன்தினம் மருதானை போலிஸ ஸ்டேஷனில் இது சம்பந்தமாக விசாரணை நடத்தினார். விசாரணை செய்த வைத்திய அதிகாரி சமையற்காரர் மின்சாரக் கம்பியை தொட்டதால் மரணமடைந்தார் என்று தீர்ப்பளித்தார்.

ஜூரர் சேவைக்கு சமூகமளிக்கவில்லை

மேஜர் பாலாமீதுவழக்கு

களுத்துறை, அக். 16

களுத்துறை அசைஸ் கோர்ட்டில் ஜூரராக நியமிக்கப்பட்ட மேஜர் பி. டபிள்யூ. பாலா வெள்ளிக்கிழமை கோர்ட்டில் ஆஜராகவில்லை. ஆனால் அவர் திங்கட்கிழமை கோர்ட்டில் ஆஜராகி மன்னிப்புக் கோரினார். மேலும் மேஜர் பாலா கவர்னரின் பாதுகாப்பாளரில் ஒருவராக இருப்பதாகவும் அதன்படி அவர் ஜூரர் வேலையில் இருந்தும் விலக்கப்பட்டவர்என்றும் மேஜர் பாலா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார்.

விசாரணை முடிவில் நீதிபதி மேஜரை விடுதலை செய்தார் மேலும் சுப்ரீம் கோர்ட் ரிஜிஸ்ட்ராருக்கு மேஜர் பாலா ஜூரர் சேவையில் இருக்கலாமா என்பதுபற்றி பிஸகாலுடன் பேசி அறியும்படி தெரிவிக்கும் வண்ணம் கோர்ட் குமாஸதாவிடம் நீதிபதி கூறினார்

டிரைவரில்லாத ரயில்!

இந்தியாவிலும் ஏற்படுத்தப்படும்

லண்டன், அக். 12

டிரைவரில்லாத ரயில் வண்டி இப்போது பிரிட்டனில் பரிசோதனைக்கு விடப்பட்டது. 100 மைல் தூரம் மணிக்கு ஓடக்கூடியது. தானாகவே சிக்னல் அறிந்து பிரேக் போட்டுக்கொள்ளக் கூடியது. இம்முறையை இந்தியாவுக்கும் கொண்டு வருவதுபற்றி உத்தியோக முறையிலேயே யோசனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இதனால் செலவும் குறைச்சல்தானும்.

திங்களைப் பத்திரிகை எழுதுவது:

இடது சாரிகளின் வேலைத் திட்டம்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆட்டிவைக்கும் யூ. என். பி. குடும்ப அரசாங்கம் கூடாது

பூரண தேசிய சுதந்திர ஆட்சி நிறுவப்படவேண்டும்

கடந்த புதன்கிழமை வெளியான "நிதாஸ" எழுதிய ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம்.

ஏகாதிபத்திய — முதலாளித்துவ முறையை அடிப்படையாகக்கொண்டதும், சில பணக்கார குடும்பங்களின் பரம்பரைப் பாதுகாப்பையே குறிக்கோளாகக் கொண்டதுமான, யூ. என். பியை இருந்த இடமே தெரியாதபடி ஒழித்துக் கட்டாவிட்டால் இத்தேச மக்களுக்கு ஒருபோதும் நித்திரையிலும் கூட நிம்மதி உண்டாகாது. எனவே அதிகாரத்தைப் பற்றியிருக்கும் யூ என் பியோடு பார்லிமெண்டிலும் வெளியேயும் போராடவேண்டியதே இத்தேச சீர்திருத்தவாதிகளுக்கு ஒரு பொது லட்சியமாய் இருக்கவேண்டும் இதன்படி இடதுசாரிகள்—சமசமாஜிகள்—நடந்து கொள்ளுவார்கள் என்பது நிச்சயம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய உறவுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாதவாறு நடந்துகொள்ளுவோமென்று, சேனநாயக்கா—கொத்தலாவல — பண்டாரநாயக்கா ஆகியோர் அடங்கிய யூ. என். பிகள் பலமுறையும் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றனர். உடன்படிக்கையும் கூட செய்திருக்கின்றனர்.

இந்நிலைமையில் சமசமாஜிகள் பார்லிமெண்டுக்குச் செல்லுவது, சேனநாயக்கா குடும்பத்தினரின் சுக சௌகரியங்களை மென்மேலும் அதிகரிக்கச் செய்வதற்கல்ல மாடி வீட்டு பெரிய மனிதர்களின் உயர்ந்த பதவியைக் காப்பாற்றுவதற்கல்ல. அவர்களின் சின்னப் புத்தியான நடவடிக்கைகளை மறைப்பதற்கல்ல. மற்றப்படி இவர்களின் அந்நியநாட்டு உல்லாசப் பிரயாணங்களுக்கும், அலங்காரமான — வெளிதோற்றமான—போலி வேலைகளுக்கும் பொதுப் பணத்தை செலவிடுவதை ஆதரிப்பதற்குமல்ல, பார்லிமெண்டிலும் சென்டிலும் நடக்கிற 'கணணாமபொத்தி' விளையாட்டுகளை அமபலத்திற்கு கொண்டுவந்து, இவைகளை ஒவ்வொன்றாக பொதுமக்களுக்கு அலசிக் காட்டுவார்கள். அதாவது பின்வரும் கோரிக்கைகளுக்காக சமசமாஜிகள் யூ என். பியான சேனநாயக்கா குடும்பத்தோடு போராடுவார்கள்:—

1. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சம்பந்தமற்றபூரணதேசிய சுதந்திரத்திற்காகவும், 2. அடிமைசோல்பரி அரசியல் திட்டத்தை எதிர்ப்பதுடன், 18 வயதுடைய எல்லோருக்கும் வாக்குரிமை அடைவதற்காகவும் 3. பத்திரிகைகள் புத்தகங்கள் பிரசுரங்கள் வெளியிடும் உரிமைக்காகவும், கூட்டங்கள் கூடுதல், வேலை நிறுத்தம் செய்தல், ஊர்வலம் செல்லுதல் ஆகியவைகளின் உரிமைகளுக்காகவும், 4. விசாரணையின்றியும் காலவரையறையின்றியும் அரசியல் கைதிகளை சிறைப்படுத்தும் அடக்குமுறைச் சட்டங்களை வாபஸ் பெறச் செய்யவும், 5. தொழிலாளர்களின் உரிமைகளுக்கு தடையாய் இருக்கும் சட்டங்களை ஒழிப்பதற்காகவும், 6 தேசியச்செலவம் ஒன்றுசேரும் ஸ்தாபனங்களானபாங்கு, இன்ஷூரன்ஸ முதலியவைகளை தேசிய மயமாக்குவதற்கும், 7. விளை நிலங்களில் 500 க்கு மேற்பட்டவைகளை தேசியமயமாக்குவதற்கும், 8 பஸ போக்குவரத்து முதலிய போக்குவரத்து சாதனங்களை தேசியமயமாக்குவதற்கும, 9. பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களை பிறநாடுகளிலிருந்து அரசாங்கம் மூலமாகமவ இறக்குமதி செய்வதற்கும், 10 வருடத்திற்கு 6000 ரூபாயக்குமல வருமான முள்ளவர்களுக்கு மேலும் ஆதாய வரி விதிப்பதற்கும, 11. நாளொன்றுக்கு 8 மணி வீதமாக வாரத்துறகு 40 மணி வேலை நேரத்திற்காகவு ,12 நோயுற்றபோதும வேலையிலலாதபோதும வாழ்க்கைச் செலவுபிறும இன்ஷூரன்ஸ திட்டத்திற்காகவும, 13. வயது 60 முடிந்தபின் ஜீவனுமசத்திட்டத்திற்காகவும, 14. பிரசவத்திற்கு முனனும பின்னும் 6 வார ஓய்வுடன சம்பளம் பெறும் திட்டத்திற்காகவும், 15. அரசாங்க ஊழியர் எல்லோருக்கும் தொழிற்சங்க உரிமையைப் பெறுவதற்காகவும், 16 வேலை நிறுத்தங்களின் போது வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மறுபடியும் அந்தந்த வேலைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காகவும், 17. விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலமாக விளை நிலங்கள் பெற்றுக்கொள்ளுவதற்காகவும், அவர்களால் விளைவிக்கப்படுபவைகளை தகுந்த விலைக்கு விற்பனைசெய்யும் திட்டத்திற்காகவும், விவசாய வசதிக்காக சுலபமான நீர்ப்பாசன வசதிகளுக்காகவும், 18 வருடாவருடம் வெளளப் பெருக்கால ஏழைகளுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கும் தகுந்த நஷ்ட ஈடு பெறுவதற்காகவும், 19 நகரங்களில் இருக்கும் சந்துகளை ஒழித்து பூரண சுகாதார வசதியுடைய வீடுகளை தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தால் நிறுவிக் கொடுப்பதற்கும், 20. போலிசில் முறையிடுபவவைகளை சுயபாஷைகளில் குறித்துக் கொள்ளுவதற்காகவும, 21 எல்லா மாணவர்களுக்கும் உணவு, உடை, புஸ்தகம் முதலியவைகளோடு, ஆரம்பத்திலிருந்து சர்வகலாசாலைவரைக்கும் அங்கபூரணமான கடடாய இலவச கலவித்திட்டத்திற்காகவும், 22 யுத்த சேவையிலிருந்து கலைக்கப்பட்டோர்களுக்கு வேலையோ ஜீவனுச்சமோ பெற்றுக் கொள்வதற்காகவும், 23 மக்களின் முன்னேற்றத்திற்குதடையாய் இருப்பதும, மனிதனின் சிவில் உரிமையை பறிப்பதும் ஜனநாயக நீதிக்கு புறம்பானதுமான அடக்குமுறைச் சட்டங்களையும் அவசரச் சட்டங்களையும் ரததுச் செய்வதற்காகவும், 24 சரியானபடி ஜனங்களுக்காக ஜனங்களின் சர்க்காரை அமைப்பதற்காகவும் ஆன இவைகளுக்காக இடதுசாரிகள் — சமசமாஜிகள் — போராடுவார்கள். அதற்காகவே அவர்கள் பார்லிமெண்டுக்குச் சென்றார்கள்.

தேச மக்கள் மேற்கூறிய கோரிக்கைகளுக்கு எவ்வளவு தூரம் ஆதரவு கொடுக்கிறார்களென்பது, யூ என். பி. தனிப்பட்டகட்சியாக மெஜாரிட்டிப் பலம் பெற முடியாததிலிருந்து தெரியவருகிறது. எவர் அரசாங்கத்தில் பதவிபெற்றபோதிலும் யூ என் பியை ஒழித்துக்கட்ட வேண்டியதே இன்றைய போராட்டத்தின் லட்சியமாய் இருக்க வேண்டும்.

சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்

ஹரிஜனங்களுக்கு திறந்து விடப்பட்டது

கொழும்பு, அக். 15

நேற்று மாலை 7 மணிக்கு இவ்வாலயம் இலங்கை இந்திய ஹரிஜனசேவா சங்கத்தின் தீவிர முயற்சியால் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டது. மாலை 4 30 மணிக்கு ஜிந்துப்பிட்டித் தெரு, இராம்லால மகாராஜா சத்திரத்தில் திரு லெ. க. முதலையா பிள்ளை தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டு அங்கிருந்து நூற்றுக்கணக்கான ஹரிஜனங்கள் ஊர்வலமாக மேளவாத்திய கோஷங்களுடன் கன்னாரத்தெரு, அண்டிவால்தெரு, செட்டியார்தெரு, கடற்கரைத் தெரு முதலான வீதிகள் வழியாகவந்து மாலை 7 மணிக்கு கோவிலையடைந்தனர் வழிநெடுக "தீண்டாமை ஒழிக! தேனீர்க்கடைகுவளைகள் ஒழிக" என்னும கோஷங்கள் வானைப் பிளந்தன கோவில் அர்ச்சகரால் ஹரிஜன சகோதரர்கள் கொடுத்த பூசை சாமான்கள் சுவாமிக்கு நைவேத்தியம் செய்யப்பட்டு விபூதி சந்தனம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. பின்னர் ஆலயத்திற்கு முன்னால் கூடிய கூட்டத்தில் ஆலய நிர்வாகஸ்தர்களுக்கும் இ. இ. ஹரிஜன சேவா சங்க காரியதரிசி திரு பி. என் குமாரசுவாமி அவர்களின் சலியாத உழைப்பிற்கும் விடாமுயற்சிக்கும் திரு. முதலையா பிள்ளைஅவர்களால் நன்றிகூறப்பட்டது.

நகர சபையின் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்

திரு ஜோர்ஜ் ஆர். டி சில்வா நகர சபையில் இருந்து விலகுவார்?

கொழும்பு, அக். 15

பார்லிமெண்டிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள நகர சபை அங்கத்தினர் திரு. ஜோர்ஜ் ஆர் டி சிலவா தமது நகர சபை அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்வார் என்று தெரிகிறது; இதற்குக் காரணம் "இதுவே பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் சம்பிரதாய வழக்கம்" என்று சொல்லப்படுகிறது.

திரு. ஆர். ஏ. டி மெல்லும் திரு ஏ. ஈ குணசிங்காவும் இப்போதைக்கு ராஜிநாமாச் செய்யமாட்டார்கள் என்றும், தமது பார்லிமெண்ட் கடமையைச் சரிவரச் செய்வதற்கு நகர சபை அங்கத்துவம் தடையாய் இருக்கும் பட்சத்தில் அதனை அவர்கள் ராஜிநாமாச் செய்யலாம் என்றும் அறியப்படுகிறது.

திரு. ஏ. ஈ குணசிங்கா இப்போது தொழில மந்திரி சபையின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருப்பதால் டிராம்வேக் கமிட்டித தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று கோரி திரு எம். ஜி. மெண்டிஸ நகர சபையில் ஓர் தீர்மானத்தைப் பிரேரிப்பார் என்று தெரிகிறது.

இரண்டு கொலைகள்

கொழும்பு, அக். 15

நேற்று திம்பிரிகையாயாவில் இரு குதிரைக் காரர்களுக்குள் பலத்த சண்டை ஏற்பட்டது. இதன் பயனாக ஒருவன் மற்றவனை அடித்துக்கொன்று விட்டதாகச் சொல்லப்படுகிறது

பிரளதாப சண்டைக்குக் காரணம் ஒருநேரச் சோறு சம்பந்தமாக அவர்களுள் ஏற்பட்ட தகராறே ஆகும்

இது சம்பந்தமாக குதிரைக்காரன் கைது செய்யப்பட்டிருக்கிறான்.

நீர்கொழும்பிலுள்ள குருணாவிலும் ஒருகொலைசம்பவமகடைபெற்றிருக்கிறது. இங்கு ஒருவன் இன்னொருவனைத் துப்பாக்கி கொண்டு சுட்டு விட்டதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக பிரஸதாப ஆசாமி கைது செய்யப்பட்டிருக்கிறான்.

இலங்கை இந்தியகாங்கிரஸ் பொதுக்கூட்டம்

ரக்வான், அக் 12

ரக்வான் ஜிலலாவைச்சேர்ந்த ஓரமலைத தோட்டத்தில 12-10-47 ல் காலை 10 மணிபளவில் ஜில்லாப் பிரதிநிதி திரு ஜே. ஜே. எம். தங்கராஜ் அவர்கள் தலைமையில் இலங்கை இந்தியன் காங்கிரஸ தொழிலாளரடங்கிய ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர், "இன்றய இலங்கை இந்தியரின் நிலை" என்னும் பொருள்பற்றி ஓர் சொற்பொழிவாற்றினார். கடைசியில் தலைவர் தமது முடிவுரையில், "இலங்கையில் நாம் அனைவரும் நமக்குள் இருக்கும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாயிருந்து நமக்குரிய உரிமைகளைப் பெறாமல், அடிமைகளாக ஜீவிப்பதிலும் பார்க்க சுதந்திர இந்தியாவிற்குப்போய் விடுவது நலம்" எனக் கூறினார். பின்னர் திரு எம். ராமசாமி பண்டாரம் அவர்கள் குடியின் கேட்டைப்பற்றிப் பேசினார். திரு. இ. சின்னையா, "துரையான்" என்பவர்களின் தேசிய கீதத்துடன் கூட்டம் முடிவுற்றது.

மாலை 4-30 மணிக்கு மாதம்பைத் தோட்ட முதல் டிவிஷனில் காங்கிரஸ தொழிற்சங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. [ந-நி]

கலை அறிவுப்போட்டி நிலையம்

போட்டி நேயர்களுக்கு

6-10-47 சுதந்திரனில் வெளியான எமது பிரகாரத்தில் கூப்பன் கட்டத்தில் 7-வது கலத்தில் "ங்கி" என்றிருந்தது தவறென்றும் 8-10-47 பிரசுரப்படி "ங்கு" என்றிருப்பதே சரியானதென்றும் நேயர்களுக்குத் தெரிவிக்கிறோம் அச்சுப்பிழையால் ஏற்பட்ட இத்தவறுக்கு வருந்துகிறோம். மற்றைய விபரங்களுக்கும் நிபந்தனையடங்கிய அச்சுக் கூப்பன்களுக்கும் உடனே எழுதுக.

கலை அறிவுப்போட்டி நிலையம்

"தும்பளைரோட்", பருத்தித்துறை.

அறிவித்தல்

கொழும்பு மருதானையைச் சேர்ந்த பொகவந்தலாவை 421/45 இல்லத்தில் வசிக்கும் திரு. வைரமுத்து கார்த்திகேசு பேரில் உள்ள புறுடன்ஷன் லிமிடெட் கொம்பனியின் 4290238-ம் நம்பர் பொலிஸி தொலைந்து போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது அதை யாராவது கண்டெடுப்பவர்கள் அல்லது அதில் உரிமை கோருபவர்கள், கொழும்பு, புறுடன்ஷன் கொம்பனிக்க அல்லது அவர்களின் பிரதம ஏஜண்டர்களாகிய மெல்மெஜ் பொர்ஸைக் லிமிட்டேட், தபால் பெட்டி நம்பர் 45, கொழும்பு- என்ற விலாசத்திற்கு இன்று தேதியிலிருந்து ஒரு மாதக்கிற்கிடையில் அறிவிக்கவேண்டும். கவனிக்க எந்த உரிமையும் கவனிக்கப்படாது. (Advt.)

கிரவுன் தியேட்டர் மிக்கின்னன் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 4-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ருஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி — புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை.

புதிய மதுரமான முந்திரிகைப் பழங்களும் ஆப்பிள்களும் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு.
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை, வடம், ஈககில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு திறம் லங்கா பிரான்ட் விறகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kaiyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street,
Colombo

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய பல் கலைக் கழக அறுநூறுவது விழா

இலங்கை பல்கலைக் கழகச் செய்தி

கொழும்பு, அக். 16

ஸெக்கோஸலாவியாவின் தலைநகரான பிரேக்கிலுள்ள சார்ள்ஸ் பல்கலைக் கழகம் 1948 ஏப்ரல் மாதம் தனது 600-வது வருடாந்த விழாவைக் கொண்டாடும். இவ்விஷயத்தைக் குறித்து மேற்படி கழகத்தினர் இலங்கை பல் கலைக்கழகத்திற்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர். இக் கடிதம் செக், லத்தீன் ஆகிய இரு பாஷைகளிலும் எழுதப்பட்டிருக்கிறது.

இலங்கைப் பல் கலைக்கழகம் இக்கடிதத்திற்கு சமஸ்கிருதம், லத்தீன் ஆகிய பாஷைகளில் பதில் அளித்திருக்கிறது. சமஸ்கிருதச் செய்தி அழகிய ஓலை ஏட்டில் எழுதப்பட்டிருக்கிறது. சர்வ கலாசாலைச் சின்னம் இவ்வேட்டிலும் லத்தீன் செய்தியிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

சார்ள்ஸ் பல்கலைக் கழக 600-வது வருட சாதனை இச் செய்திகளில் மிகவும் மெச்சப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப செய்திகள் சர்வதேசங்களிலுமிருந்தவரும் இதர செய்திகளுடன் குறித்த விழாவின்போது கண் காட்சிக்கு வைக்கப்படும்

ஜவுளி பதுக்கியவருக்கு ரூ. 500 அபராதம்

லைசென்ஸ பெறுதவருக்கும் ரூ 500 அபராதம்

அம்பாந்தொட்டை, அக். 16

அம்பாந்தொட்டை வில்மோட் வீதியைச் சேர்ந்த எம் ஸி எம் மஹ்ரூப் என்பவர் ரூ 2000 மதிப்புள்ள ஜவுளிகளை மறைத்து வைத்திருந்த குற்றத்துக்காக அம்பாந்தொட்டை மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ 500 அபராதம் விதித்தார்.

தங்காலையைச் சேர்ந்த ஜாஸிலகாமி ஜயவீரா என்பவர் லைசென்ஸ இன்றி ஜவுளி விற்றதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 500 அபராதம் விதித்தார்.

இன்ஷூர் கடிதங்களை திருடியதாக வழக்கு

எதிரி ரூ. 3500 பிணையில் விடப்பட்டார்

யாழ்ப்பாணம், அக் 16

கொக்குவில் தபாற்கந்தோரில் வேலைபார்க்கும் கந்தையா சுப்பிரமணியம் என்பவர் பல இன்ஷ்யூர் கடிதங்களை அபகரித்ததாகக் குற்றம்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு யாழ்ப்பாண தற்காலிக மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரியை ரூ 3500 பிணையில் போகுமாறு விடுத்து மாஜிஸ்டிரேட் விசாரணையை 17-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

கோணிப்பை ஏற்றுமதிதடை

வர்த்தகர்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கக்கூடும்

கொழும்பு, அக். 17

தென்னாப்பிரிக்காவுக்கு இலங்கையிலிருந்து பழைய கோணிப்பைகளை ஏற்றுமதி செய்வதை ஏற்றுமதி கட்டுப்பாட்டதிகாரி தடை செய்துள்ளார். இதனால் கோணிப்பை ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இது சம்பந்தமாக இலங்கை சர்க்கார் மீது 10 லட்சம் ரூபாய் நஷ்டஈடுபற்றி சட்டப்படி நடவடிக்கை இந்வார காலத்துள் எடுக்கப்படக் கூடுமென்றும் கூறப்படுகிறது

விவசாய இலாகாவுக்கு புதிய டைரக்டர்

கொழும்பு, அக் 17

இலங்கையின் விவசாய இலாகா டைரக்டராக பர்மாவில் உள்ள திரு டி. ரிஹிந்த் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதம காரியதரிசி காரியாலய அறிக்கை யொன்றில் திரு. ரிஹிந்த் விரைவில் இலங்கை வருவாரென்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே அதிகாரிகள் 61 பேர்களை கைது செய்தனர்

கொழும்பு, அக். 17

கழனிக் கரையோரப் பாதை ரயிலில் டிக்கட் இல்லாமலும் மிதிபலகையில் நின்றும் பிரயாணம் செய்தவர்கள் சுமார் 61 பேர்களை ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளும் ரயில்வே டிக்கட் பரிசோதகர்களும் கைது செய்துள்ளனர்.

இந்திய சர்க்கார் புதிய கடன்

புதுடில்லி, அக் 15

அகதிகளுக்கு உதவவும் புதிய புனரமைப்புத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கவும் பணம் தேவையாக இருப்பதால் இந்திய சர்க்கார் கூடிய சீக்கிரம் 50 கோடி ரூபாய்க்குக் கடன் எழுப்புவார்கள் என்று தெரிகிறது.

மகாராஜாக்கள் ஒழிக

பம்பாய், அக். 15

இங்குள்ள மைசூர் சங்கத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களான டாக்டர் பட்டாபி சீதாராமையா பேசிய போது, இந்திய சமஸ்தானங்களுக்கு எதிர்காலத்தில் இடமில்லையென்றும் மகாராஜாக்கள் எனப்படுவோர் நாளாவட்டத்தில் ஒழிந்து விடுவார்கள் என்றும் தெரிவித்தார்.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செடியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

ஆசிரியருக்குக் கடிதங்கள்

மன்னார் பிரதிநிதி திரு சிற்றம்பலம் அவர்கள் சேனநாயக்கா அரசாங்கத்தில் மந்திரிப் பதவி ஏற்றதை வெறுத்து இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள தமிழர்கள் எமக்குக் கடிதங்கள் பிரசுரத்திற்காக அனுப்புகிறார்கள் போதிய இடமின்மையால் நாம் எல்லாக் கடிதங்களையும் பிரசுரிக்க முடியவில்லை.

இன்று திரிகோணமலையிலிருந்து நாற்பது பேர்வரையில் கைச்சாத்திட்டு எழுதிய ஒரு கடிதம் இதன்கீழ் பிரசுரிக்கின்றோம். [ஆசிரியர்.]

சிந்தித்துப் பாரும் சிற்றம்பலம் துரையே!

ஐயா,

'காரியம் ஆகும்வரை கழுதையானாலும் காலைப்பிடி' என்பது தமிழ் நாட்டின் ஓர் நாடோடிப் பழமொழி. அதைச் செயலில் காட்டியதற்காக ஸ்ரீ சிற்றம்பலம் துரை அவர்கட்கு எங்கள் மனமுவந்த நமஸ்காரங்கள் உரித்தாகுக. மன்னார் தொகுதியில் திரு. சிற்றம்பலம் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு மூலகாரணம் நம் மாபெருந் தலைவர் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்களே என்பது எவரும் மறைக்க முடியாத உண்மை. 'யூ. என். பி யை எதிர்க்கின்றேன்' 'சேனநாயக்காவை வெறுக்கின்றேன்.' 'உங்கள் நலன்களுக்காகஉழைக்கின்றேன்' 'பட்டம் பதவி வேண்டாம்' 'உங்கள் நலனே என் நலன்' 'தமிழர்களின் உரிமைகளுக்காக என்றும் போராடுவேன்,' என்பனபோன்ற பிரசாரங்களினாலேயே திரு. சிற்றம்பலம் மன்னார் தொகுதியில் வெற்றிபெற்றார். ஆனால் மந்திரிப் பதவியைப்பற்றி திரு. சேனநாயக்கா கூறியதும் 'அகப்பட்டதைச் சுருட்டடா ஆண்டியப்பா' என்பதற்கிணங்க தான் மன்னார் தொகுதி வாக்காளர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் யாவற்றையும் மறந்து, தன் சத்தியத்தை காற்றோடு பறக்கவிட்டு பதவி மோகம் என்னும் மாய வலையில் வீழ்ந்தது மன்னிக்க முடியாத குற்றம். இச்செய்கையினால் இவர் மன்னார் தொகுதி வாக்காளர்களுக்கு மட்டுமல்ல இலங்கை வாழ் ஏனைய தமிழர்களுக்கும் பெருந் துரோகம் செய்துள்ளார் தமிழன் எனப் பிறந்தும் தமிழ் மக்களுக்குத் தான கொடுத்த வாக்குறுதிகளை மறந்து சேனநாயக்காவின் பதவி என்னும் ஆசைகாட்டி மோசம் செய்யும் மாய வலையில் இவர் வீழ்ந்தது இன்று இலங்கை வாழ் ஒவ்வோர் தமிழ் மகனையும் தலை குனியச் செய்கின்றது! 'தமிழனால் ஆகாதது ஒன்றும் இல்லை' என்றார் அமரகவி பாரதியார். ஆனால் பதவி வேட்டைக்காக பணக்காரக் கும்பலிடம் இவர் நிபந்தனையற்ற சரணாகதி அடைந்தது பற்றி வருந்தாத தமிழ் மகனே கிடையாது. தபால், தந்தி, இலாக்காவின் மந்திரியாக இன்று இவர் அமர்ந்துள்ளார் 'வீடு கொளுத்தும் ராஜாவுக்கு கொள்ளி எடுக்கும் மந்திரிப் பதவியை ஏற்க இவர் எத்தனை நாள் கனவு கண்டாரோ? பாபம்! இவர் விஷயத்தில், 'ஆழம் அறியாமல் காலை வைத்துவிட்டாரே' என்றதான் வருந்த வேண்டியிருக்கின்றது. 'படிப்பதோ பகவத் கீதை இடிப்பதோ கிருஷ்ணன் கோவில்' என்பதற்கிணங்க தேர்தல் காலத்தில் தமிழர்களுக்காகப் போராடுவேன் என்று கூறிய இவர் பதவியைக் கண்டதும், அன்று ஏசு மகானைக் காட்டிக்கொடுத்த யூதாசைப்போன்று இன்று தமிழ் மக்களைக் காட்டிக்கொடுக்கும் ஐந்தாம் படை வீரராக மாறியுள்ளார். பொது ஜனங்கள் விரும்பாவிடில் மந்திரிப் பதவியில் இருந்து தான் ராஜினாமாச் செய்யப் போவதாக இவர் கூறியுள்ளார். வாஸ்தவம். இவர் ராஜினாமா செய்வதைவிட வேறு வழியே கிடையாது. தான் செய்த குற்றத்தை உணர்ந்து இவர் அவசியம் ராஜினாமா செய்துதான் ஆகவேண்டும் 'மந்திரிப் பதவிக்கேற்ற தந்திரி' என்ற சேனநாயக்காவின் புகழுரையை விரும்புகின்றாரா? இன்றேல் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற விரும்புகின்றாரா? இனியாகிலும் நீர் செய்தது சரியாவென்று சிந்தித்துப்பாரும் சிற்றம்பலம் துரையே!

இங்ஙனம்
தமிழ் அன்பர்கள்,
சொ சமணி, ஐ ஆபிரகாம், ஈ மிக்கேல், ம அந்தோனி, சி ஜீவானந்தம், கொ வி மரியதாஸ், வி செபஸ்தியான், மா சம்பந்தன், பி குப்பையாண்டி, யெ செபஸ்தியான், வ இராசரட்னம், பி கந்தையா ஆசாரி, சு சிலுவைதாசன், ம இராமுப்பிள்ளை, பி ராமையாபிள்ளை, ந குமாரசாமி, சே லூக்காஸ், ஆர் எ கனகராசா, கே ஆர் சாமி, கே எஸ ஜீவானந்தம், ஆர் காளிராசா, வ சபாபதிப்பிள்ளை, எஸ் சுப்பையா, த குலத்துங்கர், வே பம்பையன், வி சுந்தரம், கே பெருமாள், இ தங்கராஜ, சி திருநாவுக்கரசு, வே முருகேசு, வே காத்தலிங்கம், க முத்தையா, சி கந்தையா. எஸ் ராயம்பு. யி ஆர் முத்தையா, கி மு அலாசரஸ், மோ யோசேப்.

பதவி மோகமா? வாக்குத் துரோகமா?

ஐயா!

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கற்குடாத் தொகுதிக்குச் சுயேச்சை அபேட்சகராய் நின்று, பல வாக்குறுதிகள் செய்து, காலைப் பிடித்து, பல்லைக்காட்டி வெற்றி பெற்ற திரு. நல்லையா அவர்கள், தற்சமயம் தன் மானத்தையே விற்று யூ. என். பிக் குழுவினரின் பந்தமாய், சேனநாயக்கா கொடுத்த "காரியதரிசி" என்ற வலையில் வீழ்ந்து நம் சமூகத்திற்கே துரோகம் செய்ததை நினைக்க அந்தோ எங்கள் வயிறு பற்றி எரிகிறது. உண்மைத் தேசத் தொண்டனென்றும் சமூகத் தொண்டனென்றும் நினைத்து வோட்டளித்த எமாந்தோம். தன் சுயநலத்திற்காக சமூகத்தைக் காட்டிக் கொடுப்பதா? தானும் யூ. என். பியில் சேர்ந்ததன்றி, திரு. எதிர்மன்னசிங்கத்தையும் அதில் சேர்க்கத் தெண்டிப்பதாயும் தெரிகிறது. மானங்கெட்டுவாழ்வதும் ஓர் வாழ்வா? வாக்காளரை விற்று வயிறு பிழைப்பது; உண்மைத் தேசியவாதியா இப்படிச் செய்வார். அடுத்த தேர்தலிலாவது வாக்காளர் விழிப்புடன் இருப்பார்களாக.

இங்ஙனம்,
கதிகெட்ட கற்குடா வாக்காளன்.
14-10-47.

கடிதர்களுக்கு அறிவித்தல்

திரு. சிற்றம்பலத்தின் கடிதம்

'சுதந்திரன்' பத்திரிகையில் திரு சிற்றம்பலம் மந்திரிப் பதவி ஏற்றது சம்பந்தமாக மன்னார் வாக்காளர் பலர் அனுப்பிய கடிதங்கள் ஏற்கனவே பிரசுரித்துள்ளோம். இவற்றை ஆட்சேபித்தும் "சுதந்திரன்" பத்திரிகையைக் குறை கூறியும் திரு. சிற்றம்பலம் நேற்று 15-10-47ல் வெளிவந்த ஆங்கிலத் தினசரியாகிய "டெயிலிநியூஸில்" ஒரு கடிதம் பிரசுரித்துவிட்டு அதன் தமிழ்ப் பிரதியை இன்னுமொரு தமிழ்ப் பத்திரிகையிலும் பிரசுரிக்கவும் செய்துவிட்டு இன்று எமக்கு அக்கடிதத்தின் பிரதியொன்றை ஆங்கிலத்தில் டைப் அடித்து அனுப்பியுள்ளார்.

ஒரு பத்திரிகையில் வெளிவந்த விஷயங்களையிட்டு அப்பத்திரிகையிற்தானே ஆட்சேபனை தெரிவிப்பதுதான் முறை. ஏற்கனவே இரண்டு பத்திரிகைகளில்வெளிவந்துள்ள திரு. சிற்றம்பலம் கடிதத்தை மீண்டும் பிரசுரிப்பதில் பலனில்லை. (ஆசிரியர்)

மந்திரிகள் எம்முடன் வருவார்களா?

ஐயா!

போக்குவரத்து மந்திரி திரு. கொத்தலாவலையை ஆசிரியராகக் கொண்ட, "சியறட்ட" என்னும் சிங்களப் பத்திரிகையில் (10 10-47) வெளியாகிய ஆசிரியத் தலையங்கத்தை, தமிழ் [14-10-47]ல் மொழிபெர்த்தெழுதியிருந்தீர்கள். அதில்,

"யாழ்ப்பாணத் தமிழருக்கு புகலிடமுண்டு, தென்னிந்தியாவிலும், மலேயாவிலும் போய்க்குடியேறலாம். சிங்களவருக்கு இலங்கையே சொந்த நாடு; இதுதேசத்தை விட்டு ஒரு சிங்களவன் போகவேண்டி நேரிடின்; அது சுரபுரமோ, அல்லது யமபுரமாய்த்தான் இருக்கவேண்டும். அன்றேல், ஆழும் பொருந்திய இந்துமகா சமுத்திரத்திலதான் மூழ்க நேரிடும்" என்று 'கர்ணகடூரமான வசனமாரிகளைப் பொழிந்திருக்கிறார். இவ்வசன மாரிகளைக் காதாரக் கேட்டிருக்கிறார்கள் எம் இரு தமிழ் மந்திரிமார்கள்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி, வாக்காளர்களை ஏமாற்றி, தமிழ்க் காங்கிரசின் உதவியைக் கொண்டு வெற்றிபெற்று, பின் அதற்கே கொள்ளிவைக்க ஆயத்தமாயிருக்கும் மன்னார் தொகுதி பிரதிநிதி திரு. சிற்றம்பலமவர்களும்,

தனிவனம் தேடிய தவசி போன்று, ஞானதீட்சணியம் பெற வவனியாக் காட்டையே மேற்கொண்டு, உண்மை ஞானி போல் நடித்து, அத்தொகுதி மக்களின் நல்லாசி பெற்று, வவனியாத் தொகுதிக்கு பிரதிநிதியாகத் தோன்றிய திருவாளர் சுந்தரலிங்கமவர்களும் நன்றாகக்கேட்டிருக்கிறார்கள் தமிழர்களின் மானத்தைக் காற்றில் பறக்கவிடத் துணிந்து யூ. என். பி. என்னும் மாயவலையில் சிக்கி தமிழர்களையே இங்கிருந்து ஒதுக்குவதற்கு பக்க பலமாய் இருக்கிறார்கள்.

அப்படியாயின் நாம் (யாழ்ப்பாணத் தமிழர்) இங்கிருந்து தென்னிந்தியாவிற்கோ அன்றேல் மலேயாவிற்கோ போக நேரிடின், இவ்விரு தமிழ் பிரமுகர்களும் எம்முடன் வருவார்களா?

இங்ஙனம்,
ம. ம. வில்பிரட்.

பிச்சாட் லேன்,
மருதானை. 15-10-47

"எல்லோரும் இந்தியாவில் இருந்தே வந்தோம்"

ஸ்ரீ திலீப் குமார் ராய் இசை விருந்தில் ஸ்ரீ கனகரத்னம் பேச்சு

கொழும்பு, அக் 16

வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தமது இலங்கை விஜயத்தின் கடைசி சங்கீதக் கச்சேரியை ஸ்ரீ திலீப் குமார் ராய் நேற்று மாலை செய்தார்.

ஸ்ரீ ராயை பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு சே. கனகரத்தினம் வரவேற்றுப் பேசுகையில் நாம் எல்லோருமே சரித்திரத்தில் ஓரோர் கட்டத்தில் இந்திய நாட்டில் இருந்தே இலங்கை வந்தோம் என்று குறிப்பிட்டார்.

ஸ்ரீ ராய் இலங்கையர் தமக்குக் காட்டிய அன்பையும் ஆதரவையும் மெச்சினார். தான் இந்தியாவுக்கு அனறே போக வேண்டியிருந்தாலும் சீக்கிரமே இன்னொரு தடவை இங்கு வருவேன் என்றும் தெரிவித்தார்.

வந்தே மாதர கீதத்துடன் அவர் தமது இசை விருந்தை ஆரம்பித்தார். குமரிமுனையில் தம்மால் இயற்றப்பட்ட சூரியோதயப் பாடலை அவர் பாடிய போது சபை முழுவதும் ஒரே பரவச நிலையில் காணப்பட்டது.

ரஸ்தா பாலத்தில் பலகைகள் இல்லை

போக்குவரத்து தடைப்பட்டுள்ளது

ஜாஎல, அக். 16

துடெல்லா-பாமுனுகமா ரஸ்தாவிலுள்ள பாலத்தில் இருந்த பலகைகள் அப்புறப்படுத்தப்பட்டிருப்பதால் இரு கரையிலும் பிரயாணஞ்செய்ய முடியாதபடி தடையாகி விட்டது. துடெல்லாவிலுள்ள லோகநாயகி ஆலையிலுள்ள தொழிலாளர் சிலர் சில நாட்களாக வேலை நிறுத்தம் செய்ததாகவும் அவர்கள் இதனைச் செய்திருக்கக் கூடுமென்றும் சந்தேகிக்கப் படுகிறதாகத் தெரிகிறது.

இரு இடங்களில் இருவர் கொலை

தாக்கியவர்களை போலீஸார் கைது செய்தனர்

கொழும்பு, அக். 17

தங்காலையிலும், வட்டானையிலுமிருந்து இருவர் தாக்கிக் கொல்லப்பட்டதாக செய்திகள் கிடைத்துள்ளன.

அம்பாந்தொட்டை போலீஸ் பகுதியில் கட்டைகளால் தாக்கப்பட்டவரை ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்தியதாகவும் அங்கு அவர் மரணமடைந்ததாகவும் கூறப்படுகிறது. அது சம்பந்தமாக எண்மரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

திம்பிரிகஸ்யாயாய என்னுமிடத்தில் ஞாயிற்றுக் கிழமை நான்கு பேர்களால் தாக்கப்பட்ட ஆர். அர்லேலிஸ் அப்பு என்பவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் இரவு காலமானார். அவரைத் தாக்கியதாகக் கூறப்படுபவர்களை போலீஸார் கைது செய்துள்ளனர்.

3774 லொறிகள் லைசென்ஸ் பெற மனுக்கள்

கொழும்பு, அக். 16

1948 வருடத்திற்குலைசென்சுகள் பெறுவதற்கு இலங்கையில் மொத்தம் 3774 லொறிகளுக்கு மோட்டார்கள் சட்டப்படி மனுக்கள் வந்திருக்கின்றன. லொறியைப்பற்றிய விபரங்கள் நேற்று வெளியான கெஜட்டில் பிரசுரமாயிருக்கின்றன. ஆட்சேபனையுள்ளவர்கள் நவம்பர் முதல் தேதிக்கு முன் மோட்டார் போக்குவரத்து கமிஷனருக்கு தெரியப்படுத்த வேண்டும்

வரி நெல்லுக் கொடாதவருக்கு ரூபாய் 50 அபராதம்

ஊர்காவற்றுறை, அக் 15

ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் உள் நாட்டு நெல் வாங்கும் உத்தியோகஸ்தர் திரு பத்மநாதன் அவர்கள் உள்நாட்டு நெல் வாங்கும் திட்டத்தின்கீழ் உள்ள வரிநெல்லைக் கொடுக்க மறுத்தார்களென்று குற்றஞ் சாட்டி 16 வழக்குகளைத் தாக்கல் செய்தார். எல்லோரும் தாங்கள் வரி நெல்லைக் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால் காரைநகர் மேற்கில் வசிக்கும் சிதம்பரப் பிள்ளை கந்தப்பு என்பவர் 80 கொத்து வரி நெல்லைக் கொடுக்க முடியாதென்று வாதாடினார். மாஜிஸ்டிரேட் ரூபாய் 50 குற்றம் விதித்து 30 கொத்து நெல்லையும் கொடுக்கும்படி தீர்ப்புக் கூறினார். (ந-நி)

கரையோரம் வந்த கப்பல் பிரயாணி

பிரயாணச் சீட்டும் பணமும் பறிபோயிற்று

மவுண்ட்லெவினியா, அக். 16

"ஓரியன்ட்" என்னும் கப்பல் பிரயாணிகளில் ஒருவர் கண்காட்சிக்காக மவுண்ட்லெவினியா சென்றிருந்தார். அங்கு அவரது பிரயாண உத்தரவுச் சீட்டும், பணப்பையும் களவாடப்பட்டு விட்டன. இச்சம்பவம் ஜி ஓ. எச். ஹோட்டலுக்குச் சமீபம் நடைபெற்றிருக்கிறது. போலிசார் இவ்வித களவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு தீவிரமாக முயன்று வருகிறார்கள்.

கிரேப் ரப்பர் விலை உயர்வு

கொழும்பு, அக். 16

முதலாம் நம்பர் "லாட் டெக்ஸ்" கிரேப்பினவிலை ரூ 1-00 ஆக தற்போது உயர்ந்துள்ளது இது மிக நல்ல விலை என வியாபாரிகளால் மதிக்கப்படுகிறது.

பிரியாவிடை

நயினாதீவு, அக். 15

நயினாதீவு அரசினர் வைத்தியசாலையின் அதிபராகவிருந்து உத்தியோக மாற்றமாகச் செல்லும் திரு. திருநாவுக்கரசு அப்போதிக்கரி அவர்களுக்குச் சென்ற திங்கட்கிழமையில் ஓர் பிரியாவிடை உபசாரம் கொடுக்கப்பட்டது. (ந-நி)

லண்டனில் பர்மா பிரதமர்

பர்மாவில் மந்திரிகள் கொலை வழக்கு விசாரணை

லண்டன், அக். 16

பர்மா பிரதம மந்திரி தக்கின் நு சனது கோஷ்டியுடன் இங்கு வந்து சேர்ந்தார். அவருடன் லண்டனில் பர்மா ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள 61 வயதுடைய சர் மவுங்ஜியும் வந்திருக்கிறார். ஆங்கிலோ-பர்மிய உடன்படிக்கையில் கைச்சாத்திட தக்கின் நு வந்திருக்கிறார்.

சுதந்திர பர்மாவில் ராணுவப் போலீஸ்

ரங்கூன், அக். 15

1948 ஜனுவரியில் பர்மா சுதந்திரமடைந்ததும், உள்நாட்டில் ஸ்திரமான பாதுகாப்பை நிலைநிறுத்தும் பொருட்டு அரசாங்கத்தில் 15,000 ராணுவப் போலீஸ படையினரும் 200 ராணுவப் போலீஸ அதிகாரிகளும் வேலை செய்வர். செப்டம்பர் பாதம் 117 கொலைகளும் 1116 கொள்ளைகளும் பர்மாவில நடைபெற்றன.

கொலையுண்ட பர்மா மந்திரிகளின் ஞாபகார்த்தமாக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பர்மா அந்நியநாட்டு மந்திரி தக்கின் லுன் பா பேசியபோது, நாட்டில் பயங்கரச் செயல்களை ஒழித்து அமைதி நிலவ பொது ஜனங்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

கொலை வழக்கு

பர்மா மந்திரிகள் கொலை வழக்கு விசாரணை இன்று ஆரம்பமாயிற்று. கொலை செய்ய நடைபெற்ற சதியாலோசனைக்குத் தலைவராக இருந்ததாக மாஜி பிரதம மந்திரியான 46 வயதுள்ள உசா மீது அட்வகேட் ஜெனரல் குற்றஞ் சாட்டினார். ஆங்கில பாரிஸ்டரும் முன்னர் ரங்கூனில் லாயராக இருந்தவரும் ராணுவத் தலைவருமாக இருந்தவருமான வெர்ட்டினஸ் எதிரி உசா தரப்பில் ஆஜரானார். மற்றும் 4 எதிரிகள் சார்பாக உசாவின், தின் ஜீயா என்ற இரு பர்மிய லாயர்கள் ஆஜரானார்கள். மற்ற எதிரிகள் தங்களுக்கு லாயர் வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

அட்வகேட் ஜெனரல் உடன் பியோ கொலை சம்பவத்தை எடுத்துக்கூறினார். (ராய்ட்டர்)

நெல் கடத்தியவர் பிடிபட்டனர்

ஊர்காவற்றுறை, அக். 15

ஊர்காவற்றுறைக் கருகிலுள்ள சுருவில் என்னுமிடத்தில் கள்ளத்தனமாக அரிசி நெல் வந்திறங்குதென ஊர்காவற்றுறைப் போலீஸாருக்குத் தகவல் கிடைத்தது உடனே போலீஸார் அங்கு சென்று ஒழித்திருந்தனர். இரவு 10-30 மணிபளவில் ஓர் வண்டி அரிசி ஏற்றி வருவதைக் கண்டு நிறுத்தினர். உடனே வண்டியை ஓட்டியவரும் வண்டியிலிருந்த இருவரும் வண்டியில் இருந்து குதித்து ஓடிவிட்டனர். பின்னர் போலீஸார் வண்டியையும் அரிசியையும் ஊர்காவற்றுறை போலீஸ ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனார்கள். (ந-நி)

கணவனைக் கத்தியால் வெட்டிய பெண்

ரிமாண்டில் வைக்கப்பட்டாள்

கண்டி, அக். 16

மகையாவ என்னுமிடத்தைச் சேர்ந்த சாமுன் என்பவரை அவரது மனைவியான அக்னெஸ் பெரேரா என்னும் பெண் கத்தியால் சனிக்கிழமை இரவு வெட்டியதாகவும் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சாமுன் அங்கே மரணமானதாகவும் கூறப்படுகிறது. பிரஸ்தாபப் பெண் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 17உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org